




# தமிழரசு

16-11-1992 ரூ.1








# இந்த இதழில்...


தென் மாநிலங்கள் ஏற்றம் பெற...
—மாண்புமிகு முதல்வர் உரை ... 2

புதிய பாதை
—மாண்புமிகு முதல்வர் உரை ... 9

ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி ... 11

சலங்கை விழா ... 12

உணவு-நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயல்பாடுகள் - ஆய்வு ... 15

அரசின் சாதனைகள் - ஓர் ஆய்வு ... 17

வாழ்வின் விடிவெள்ளி அறிவொளி ... 24

கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ... 27

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை வளமாக்கும் பணிகள் ... 29

இந்திரா காந்தி வாழ்விலே ... ... 33

கலை உலகின் முழு நிலவு ... 37

ஏழை எளியோருக்கு எண்ணிலா வீடுகள் ... 41

தமிழக அரசு வழங்கும் திரைப்பட விருதுகள் ... 43

கூட்டுறவு முறையில் நாய் வளர்க்கத் திட்டம் ... 45

புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ... 47



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

கார்த்திகைத் திங்கள் - 1

மலர்: 23 இதழ்: 10

16-11-1992




கூட்டுறவில் இனிமை உள்ளது. கூட்டுறவாக இருப்பவர்களில் நலிந்தவர்கள் வலிவுற்றவர்கள் என்று யாரும் இல்லை. ஒருவர் மற்றவருக்குச் சமம். என்னுடையது, உன்னுடையது என்ற உணர்வே இல்லை. அவ்வாறே ஒரு சங்கம், நாடு, மனித சமுதாயத்தை ஒரு குடும்பமாய் எடுத்துக் கொண்டால் எல்லா மனிதர்களும் கூட்டுறவாளர்கள் ஆவார்கள்.

- மகாத்மா காந்தி



கூட்டுறவு என்ற சொல்லில் 'கூட்டு' 'உறவு' என்று இரண்டு வார்த்தைகள் அடங்கியுள்ளன. 'கூட்டு' மட்டும் என்றால் இலாபம் மட்டும் என்றுதான் பொருள்படும். உறவு கூட்டுடன் சேர்ந்தால்தான் தோழமையின் அடிப்படையாக - இலாபமற்ற நோக்கம் தெளிவாகிறது.

- பேரறிஞர் அண்ணா



''கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல - தரத்தை மட்டுமல்ல - அவர்களை மதிக்கக் கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல - தங்களுக்கு முடிவதை - பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணமே கூட்டுறவியக்கத்தின் அடிப்படை மூலதனமாகும்''.

- டாக்டர் எம்.ஜி.ஆர்.

39-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினையொட்டி, கூட்டுறவு தொடர்பான கட்டுரைகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.




# தென் மாநிலங்கள் ஏற்றம் பெற...

## மாண்புமிகு முதல்வர் உரை

**வ**ரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை மாநகரத்தில் தென் பிராந்தியக் குழுவின் 21-வது கூட்டத்தில் உங்களையெல்லாம் வரவேற்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இக்கூட்டத்தை நடத்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் சென்னையைத் தேர்ந்தெடுத்ததற்காக் நான் மகிழ்ச்சியடைகிறேன். 1957-1978-லும் தென் பிராந்தியக் குழுக்கூட்டம் சென்னையில் நடத்தப்பட்டிருக்கிறது. 14 ஆண்டுகளுக்குப்பிறகு சென்னையில் இக்குழுக்கூட்டம் நடைபெறுவது குறித்து மகிழ்கிறேன். பொது நலன் கருதி மாநிலங்கள் மத்திய அரசுக்கு இடையே ஒருங்கிணைந்த கருத்து உருவாக இந்தக் கூட்டம் புதிய தொடக்கத்தை உருவாக்கும் என நம்புகிறேன். மத்திய உள்துறை அமைச்சர், முதலமைச்சர்கள், பாண்டிச்சேரி துணை ஆளுநர், பிற அமைச்சர்கள் தலைமைச் செயலர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு எனது இதயப் பூர்வமான வரவேற்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வந்து தங்குவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் திருப்திகரமானதாக இருக்குமென நம்புகிறேன்.

பிறநாடுகளை விட, மக்கள் தொகையிலும் பரப்பிலும் மிகப் பெரிய அமைப்பிலுள்ள மாநிலங்களைக் கொண்ட நமது ஆட்சி அமைப்பில் தென் பிராந்தியக் குழு நல் இணக்கத்தோடு, பொதுக் காரியங்களுக்குப் பயனுள்ள வகையில் காரியமாற்றும். இத்தகைய குறிக்கோளை அடைவதற்குப் பிராந்தியக் குழுக்கள் உத்வேகப்படுத்தப்பட்டு முக்கியப் பரிந்துரைகளை வழங்க





வேண்டுமென சர்க்காரியாக் கமிஷன் கூறியுள்ளது.

அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவின் கீழ் பிராந்தியக் குழுக்கள், குழுவின் பரிந்துரையோடு அமைக் கப்பட்டிருக்க வேண்டும். இந்திய அரசு கமிஷனின் பரிந்துரைகளைச் வழிகோலும். மற்றும் பிற வெளி நாடுகளில் தேசிய ஒருமைப்பாட்டுத் தன்மையினைப் பேணுவது தேவைப் பட்ட கட்டாயமாக இருக்கின்றது. இந்த வகையில் வெளிநாடுகளில் அடிக்கின்ற காற்று நம்மை ஊடறுத்த போதும் மாநிலங்களிடையே நல்

நீண்ட பெரும் விவாதப் பொருள் களுக்கிடையே பொது நலன் கருதி சில பிரச்சினைகளை எடுத்து வைக்க விரும்புகின்றேன். நிதிப்பற்றாக் குறை என்கிற நிலையில் உரங்கள் எரிபொருள்கள், சமையல் எரிவாயு மற்றும் அரிசியின் விலையைக்



செயலாக்கம் புரிவதில் விரைவான முடிவினை எடுக்கும் என நம்பு கிறேன். பிராந்திய ஒத்துழைப்பு உலகம் முழுவதும் புதிய உற்சாகத் தோடு எடுத்துரைக்கப்படும். அநேக வெளி நாடுகளில் வெற்றிகரமாக நடைபோடுகிற அமைப்பினைக் கண்டறிவது, முழு தேசத்தின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் இணக்கம் உருவகப் புதிய உறவுப் பாலங்களை அமைத்துக் கொண்டு நம்முடைய நாடு, இந்த நிலைமை யைப் பேணுவதில் நல்ல இடத்தில் உள்ளது. பிராந்தியக் கூட்டங்களின் ஊக்கமிக்க செயல்பாட்டினை மத்திய அரசு மிகுந்த ஈடுபாட்டோடு செயல்படுத்துவது இதனை வெகு வாக ஊக்கப்படுத்தும்.

கூட்டியதன் மூலம் மாநிலங்கள் மிகப்பெரிய கஷ்டத்திற்கு ஆளாக் கப்பட்டிருக்கிற நிலைமை, மக் களோடு, அவர்களின் அன்றாட வாழ்வோடு மிக நெருக்கமாக உள்ள மாநிலங்கள் நேர் எதிர்மாறான நடவடிக்கைகளைச் சந்தித்தாக வேண்டிய நிலைமை உள்ளது.

தமிழகத்தில் பொது உணவு விநி






யோகத் திட்டத்தை மிகவும் சரியாக நடைமுறைப்படுத்துவதால் ஏழை மக்கள் அரிசி வாங்குவதற்கேற்ப விலையைக் கட்டுப்பாடாக வைத்துள்ளோம். எப்படியோ இத்தகைய கொள்கைகளில் மத்திய அரசு நிதிப் பற்றாக்குறைச் சுமையை மாநில அரசுகளுக்கு மாற்றிவிட்டது. அரசுப் பணியாளர்களுக்கு கூடுதல் விலைவாசிப்படி கொடுப்பதன் மூலம் அதிகப் பண வீக்கத்தை உருவாக்கக் கூடிய தன்மையில் தவிர்க்க முடியாத சுமையாக அமைந்து விட்டது.

கடுமையான நிதிப்பற்றாக்குறை நிலைமையில் வளர்ச்சிப் பணிகளைப் பாதிக்காத அளவிற்கு நாங்கள் பார்த்துக் கொள்ள முயன்ற போதும் மத்திய அரசு பொதுவாக இத்தகைய நிலைமையை உணர்ந்து மாநிலங்களுக்கு உதவிட முன் வரவேண்டும். உணவுப் பொருள்களின் விலையை உயர்த்துவதில் மத்திய அரசு முயற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஏற்கெனவே உணவுப் பொருட்கள் மீது எற்பட்ட விலை உயர்வு பிரச்சினையில் தாங்க முடியாத சுமையைத் தாங்கியுள்ள நாங்கள் மேலும் விலை உயர்வுச் சுமையை தாங்குவது இயலாததாகும்.

சிறு சேமிப்பு வசூலில் சிறப்பு ஊக்கத்தொகை வழங்குவதை மீண்டும் கொண்டு வரவேண்டும் எனச் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன். இதனால் சிறு சேமிப்பு வசூல் மிகவும் பாதிக்கப்பட்டதோடு ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்குப் பயங்கரமான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. சிறுசேமிப்பு வசூலில் சலுகைகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதால் 1992-93-ஆம் ஆண்டுத் திட்டத்தை உருவாக்கிய போதிலும் மாநிலத் திட்டங்களுக்குப் பயங்கரமான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டில் சிறுசேமிப்பு வசூலை அதிகப்படுத்தவும், இதன் மூலம் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், சிறுசேமிப்பு வசூலுக்கு ஊக்கத் தொகை வழங்குவது குறித்து இந்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென இந்தக் குழு தீர்மானம் போட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ரிசர்வ் வங்கியிலிருந்து மாநிலங்களுக்குத் தேவைப்படும் சாதாரண வழிமுறை ஏற்பாடுகள் 1988-ஆம் ஆண்டிலிருந்து ஒரு தேக்க நிலையை அடைந்துவிட்டது என்பதையும் உங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அதிலிருந்து ஆண்டுத் திட்ட மதிப்பீடுகள் இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. ஆகவே, இவ்வரையறை மாற்றியமைக்கப்படுவதற்கு இதுவே தருணம் ஆகும். நடப்பு நிதியாண்டில் இந்த வரைமுறை 2 மடங்கு ஆக்கவேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த அனைத்து முதலமைச்சர்களும் ஒத்துக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

வெளியிலிருந்து நிதி உதவி பெற்ற திட்டங்களுக்கு மைய அரசு நிதி உதவி அளிப்பது மாநிலங்கள் கவனத்தை உடனடியாக ஈர்க்கும் விஷயமாகும். மாநில அரசுகள் வெளி நிதி உதவி அளிப்புத் திட்டங்களுக்கு 100 சதவிகிதம் மத்திய அரசு உதவ வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது ஏற்கெனவே 1992 மே திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் ஒத்துக் கொள்ளப்பட்டது. அதனை நடப்பு நிதியாண்டில் ஊக்கமாகச் செயல் படுத்த வேண்டும். மத்திய அரசு இந்தப் பிரச்சினைக்குப் புதிய வழிமுறைகளை இதுவரை தரவில்லை. மிகவும் நிதி நெருக்கடியான இந்த ஆண்டில் வெளிக் கடன்களைப் பயன்படுத்துவதில் இவ்விதச் சுணக்கம் ஆழ்ந்த கவலையை அளிப்பதோடு வெளி வட்டாரக் கடன்களைப் பயன்படுத்துவதிலும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதற்கான வழிமுறைகளை விரைவாக மத்திய அரசு வெளியிடும் என நம்புகிறேன்.

ஏற்கெனவே ஒத்துக்கொள்ளப்பட்ட சரக்கு வரி விதிப்பு முடிவினை நாடாளுமன்றக் கூட்டத்தில் அறிமுகப்படுத்துவதில் காலத் தாமதம் செய்வதாகக் கருதுகிறோம். மேலும், இந்தப் பிரச்சினையைத் தேசிய பொது நிதி நிறுவனம் அதன் கொள்கை, செல்லையாக்குழு ஆகியவை காலத் தாமதத்தை உருவாக்குவதாக மிகவும் கவலையோடு கருதுகிறோம். ஏற்கெனவே திரு ராஜீவ்காந்தி அவர்கள் கூட்டிய முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட முடிவினை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்பது எனது கருத்தாகும். அடுத்து வருகிற நாடாளுமன்றக் கூட்டத்திலாவது இதனை அறிமுகப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது தொழில் வளர்ச்சிக்குச் சரியான சுற்றுப்புறச் சூழ்நிலையை உருவாக்கித் தருகின்ற பொறுப்பு மாநில அரசுகளுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்குத்

தேவையான மின்சாரம், சாலை, தண்ணீர், தகவல் தொடர்பு ஆகியவற்றைப் பொதுத்துறைக்கு உருவாக்கித் தருவதற்கு மிகப்பெரிய மூலதனம் தேவைப்படுகின்றது. ஆகவே, மாநிலங்களுக்கு அதிக நிதி தேவைப்படுகிறது. **கூட்டு நிறுவன** வரி முன்பைவிட கூடுதலாக இருப்பதால் மாநிலங்களுக்குப் பங்கிட்டுத் தர வேண்டுமென்பது எனது கோரிக்கையாகும். இந்த வரித் தொகையை மாநிலங்களுக்கிடையே பங்கிடு செய்வதில்விரைவாகத் திருத்தம் கொண்டு வந்து செயல்படுத்த வேண்டுமெனத் தென் மாநிலங்கள் ஒன்று சேர்ந்து கோரிக்கை வைக்குமென நம்புகிறேன்.

தமிழகத்திலும் தென் மாநிலங்களிலும் கடந்த ஆண்டுகளில் மத்திய அரசின் மூலதனம் மிகக் குறைவாகவே இருக்கிறது. பம்பாயில் எரித்து வீணாக்கக்கூடிய இயற்கை வாயுவைத் தென் மாநிலங்களுக்குக் கொண்டுவர தெற்கு மாநிலங்கள் வேண்டுகோள் வைத்துள்ளன. 8-வது திட்டத்தில், இந்த திட்டத்தைச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பிரச்சினை மாநில அமைச்சர்களின் குழுவில் எடுத்துரைக்கப்பட்டதே தவிர, வேறு எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. எரிவாயுக்குழாய் அமைக்கத் திட்டமிட்டபோது வழக்கமான சந்தேகங்கள் எழுந்தது. ஆனால், செயலாக்கத்தில் நிற்கவில்லை. மேற்கிலும் வடக்கிலும் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதில் முன்னோடியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிதி தேவையாகும். மூலதனத்தோடு ஒப்பிடுகிறபோது நீண்டகால மதிப்பு மிக்க திட்டங்களாகும். அனைத்து தென் மாநிலங்களும் இந்தத் திட்டங்களுக்கு அதிக மூலதனம் வைத்திருக்க வேண்டும். இந்தத் திட்டத்தில் மூலதனமிட ஒத்துக் கொள்ளப்பட்ட அடிப்படையில் தென் மாநிலங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தினைத் தெரிவிக்கிறேன். அதாவது கொங்கன் ரயில் பாதை போல இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இணைய வேண்டும். இதன் மூலம் தென் மாநிலங்களில் புதிய மின்சார உற்பத்தித் திட்டங்கள், உர உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றைத் தென் பகுதியில் உருவாக்க முடியும். இந்தப் பொதுக்காரியத்தை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். தென் மாநிலங்களை மிகவும் மாற்றியமைக்கக்கூடிய சக்தி வாய்ந்த எதிர்காலத்தை உருவாக்க தலைவர் அனைத்து உதவியையும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

''தீபகற்ப நதி நீர்த் தொகுப்பு'' மத்திய மாநில அரசுகள் முக்கிய அங்கம் வகிக்கின்ற மற்றொரு விஷயமாகிறது. தென் மாநிலங்களில் கடலுக்கு வீணாகப் போகின்ற நீரை எடுத்து, மக்கள் பயன்படும் வகையில் செய்வதே சிறந்தது. கேரள மாநிலத்தோடு மேற்கத்திய நதி மீதான இருதரப்புப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. நாம் இப்பிரச்சினையைப் பரஸ்பரக் கூட்டுறவு உணர்வுக்கு இணையாக எடுத்துக்கொள்வோம் என நம்புகிறேன். 8-வது ஆண்டுத் திட்டத்தில் தீபகற்ப நதி நீர்த் தொகுப்பிற்காகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவர் எனக்கு உறுதியளித்திருக்கிறார்கள். வெகு காலத்திற்கு வரைபலகையில் இது இருக்கக்கூடாது என்பது என் கருத்து. அநேகத் தொழில் நுட்பக் கேள்விகளுக்குத் தீர்வு காண்கின்ற வகையில் மிக விரைவில் திடமான நடைமுறைகள் தேவைப்படுகின்றன.

1992 மே திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், தென் பிராந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியினைச் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்க வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்திருந்தேன். மாநில நிதி நிலையங்களுக்கு மறுநிதிக் குறியீடு வெட்டப்பட்டிருக்கின்ற சில அவசரமான நிலைமை **நினைவுக்கூரப்படுகிறது. கடன்களை வசூல் செய்வதென்பது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தா**

**மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான் அவர்கள் தமது துணைவியாருடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார் (9.11.'92).**





மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. கே.விஜய பாஸ்கர ரெட்டி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார் (9.11.'92).

லும், திரும்பவும் கடன் வழங்கப் படுவது சுருக்கப்பட்டுள்ளது. இது, ஏற்கெனவே ஒப்புதலளிக்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளுக்குக் கூட, மாநில நிதி நிறுவனங்கள் கடன் களை வழங்க முடியாத நிலையையே குறிக்கிறது.

இத்தகைய மோசமான நடவடிக் கைகள் வளர்ச்சியை வேகப்படுத்தும் எங்களது முயற்சிக்குப் பாதகம் விளையும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். ஏற்கெனவே எடுக் கப்பட்டிருக்கிற முடிவினை மறு ஆலோசனை செய்து மறுநிதி இலக் கினை ஏற்கெனவே இருந்த நிலைக் குக் கொண்டு வரக் கேட்டுக் கொள் கிறேன். தென் பிராந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நடத்து வதற்கு விரைவான நடவடிக்கையை எடுக்க இயலும் என நான் கருதுகிறேன்

உரங்களின் விலை ஒரு முக்கிய மான அவசரமான பிரச்சினையாக நமக்கெல்லாம் இருக்கிறது. பாஸ் பேட், பொட்டாஷ் ஆகிய உரங் களின் விலை இதற்கு முன்னர் இல்லாத உயர்ந்த விலை, விவசாயி களை வெகுவாகப் பாதித்துள்ளது. இதனால் ராபி பருவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக பொட்டாஷ் உரத்தின் விலை 3 மடங்கு உயர்ந்திருக்கின்றது. இந் நாட்டில் தமிழகந்தான் பொட்டாஷ் உரத்தை மிக அதிக அளவில் பயன் படுத்துகிறது. உரத்திற்கு கொடுக்கப் பட்ட மானியத்தைக் கட்டுப்படுத்து வதற்கு என்ன கட்டாயம் ஏற்பட்டது என்பதை என்னால் உணர முடிய வில்லை. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விலையைக் குறைப்பதற்காக ஒரு தடவை மானியம் மத்திய அரசு அறிவித்திருக்கிறது என்பதில் சந் தேகமில்லை. பாஸ்பேட் பொட்டாஷ் ஆகியவற்றின் விலை அதிக அள விற்கு உயர்ந்திருக்கிறதென்பது உண்மையிலேயே மன அதிருப்தி யை அளித்துக் கொண்டிருக்கிறது. இதனால் உரத்தைப் பயன்படுத்து வது மிகவும் குறைந்திருப்பது மிகவும் ஆழந்த கவலையை உருவாக் கியிருக்கிறது. இதனால் உணவு உற் பத்தி பாதிக்கின்ற நிலை உள்ளது. இப்பிரச்சினைக்குப் பரிட்சார்த்த மான முடிவினை நாம் கண்டாக வேண்டும். விலையின் உயர்வைப் படிப்படியாக சில ஆண்டுகளில் உருவாக்கியிருக்கலாம் என்பது என் கருத்து. உரவிலை ஏறியதால் உரங்கள் வாங்குவதற்கான கடன் வசதி போதுமானதாக இருக்குமா எனக் கருத்தில் கொள்ள வேண்டும்.

உயர்ந்துவிட்ட உர விலையைச் சமாளிக்க வங்கிகள் மேலும் கடன் உதவி வழங்குவதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மைய அரசு எடுக்க வலியுறுத்தும் மன்றமாக இதை நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றத்தில் எடுக்கப் பட்ட முடிவின் அடிப்படையில் மத்தியசாலைநிதி, அதற்கு ஆகின்ற செலவு கூடியிருப்பதை இக்குழுக் கூட்டத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ள விளக்க உரையில் காண முடிகிறது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். மத்திய அரசு நிதியினைப் பெற்றவுடன் மாநில அரசுக்கு ஒதுக் கப்பட வேண்டிய பங்கினை ஒதுக் கப்படவில்ல என்பதாகும்.

சாலைகளைப் பராமரிப்பதும், புதுப்பித்தலும், பெருகிவரும் போக்கு வரத்து நெரிசலைக் கையாளுவதும், இத்தருணத்தில், குறிப்பாக புதிய தொழில் வளர்ச்சி சிறந்த அடிப் படை வசதிகளைப் பொறுத்தே அமையும்பொழுது முக்கியமான பிரச்சினையாகிறது. நிதி யிலிருந்து பெறப்பட்ட மாநில அரசுக்குச் சேரவேண்டிய தொகை இன்னும் கிடைக்காத நிலைக்கு திருப்திகரமான தகுந்த பதில் இன் னும் வரவில்லை. இந்த நடப்பு நிதி ஆண்டிலேயே அந்நிதிகள் நமக்குக் கிடைக்க வழி வகுத்தலில் எல்லோ ருக்கும் உடன்பாடு உண்டு என்பதை நான் நம்புகிறேன்.

தென் பிராந்திய தேசிய நெடுஞ் சாலைக்கு ஒதுக்கிய முதலீடு போது

மானதல்ல என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிழக்கு தேசிய நெடுஞ்சாலை மற்றும் நான்கு வழித் தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கும் நான் வேண்டியிருக்கின்றேன். தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி அளிக்க வெளி உதவி பெறுவதில் மத்திய அரசு முனையும் என்பதைக் கருத்தில் கொள்கிறேன். தென் பிராந்திய மாநில அரசுக்கு ஒரு கணிசமான நிதி ஒதுக்கீடு கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

தென் மாநில அரசுகள் சுற்றுலாத்தரத்தை உயர்த்த கூட்டாக இணைந்து செயல்படும் என்ற ஆலோசனைக்கு இசைவு தெரிவிக்கின்றேன். தென் மாநிலங்கள் சுற்றுலா வளர்ச்சிக்கான பணிகளை இணைந்து செய்யும் கருத்தை நான் ஏற்கிறேன். தொழில் வளர்ச்சிக்குச் சுற்றுலா மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வேலைவாய்ப்பிற்குச் சுற்றுலா நல்ல இடத்தை வழங்குகிறது. பழஞ் சிறப்பைத் தென்பகுதி வெளிபடுத்துவதால் சுற்றுலாப் பயணிகள் நிரம்ப வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. சிறப்புமிகுந்த சுற்றுலாப் பகுதிகளை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டின் தெற்குப்பகுதி சிறப்புடையதென அறிவிப்பு செய்வதன் மூலம் ஒரு தெளிவான வழிமுறையும் அதன் மூலம் மூலதனமிடுகிற ஈடுபாடும் ,ஏற்படும். நாம் இத்தகைய பொதுவான காரியத்தில் இணைய வேண்டும்.

பொது நலம் கருதி சில தகவல்களைத் தர விரும்புகிறேன். இக் கூட்டத்தில் விவாதித்திருப்பதற்காகத் தரப்பட்டிருக்கும் பொருள்களைத் திருப்பிப் பார்க்க விழைகிறேன்.

காபி, தேயிலை ஆகியவற்றிற்குத் தமிழகத்தில் விதிக்கப்பட்டிருக்கும் வரி விகிதங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். போடப்பட்டிருக்கும் வரி மிகக் குறைவானதாகும். தற்சமயம் கேரளம், கர்நாடகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட வழியில் சிறிய விவசாயிகளுக்கு வரி விலக்கும் விவசாய வருமான வரியிலிருந்து முற்றிலும் விலக்களித்தும் அதிக அளவில் அதிக வருமானம் பெறும் சாகுபடியாளர்களுக்கு வரி விதித்தும் மாற்றியமைத்திருக்கிறோம். தமிழகத்தில் விதிக்கப்பட்டிருக்கிற வரி மிகக் குறைவானது என்பதால் மீண்டும் மாற்றியமைப்பதற்கு வழியில்லை. நிதிப்பற்றாக்குறை மிகுதியாக உள்ள நிலையிலுள்ள இம்மாநிலத்தில் மேலும் வரிக்குறைப்பு என்பது மிகவும் கஷ்டமானதாகும்.

மாநிலங்களிடையே சாலைப் போக்குவரத்தில் பல பிரச்சினைகள் இருப்பதை விவாதப் பொருளிலே குறிக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத்துறை அமைச்சர்களின் கூட்டத்தில் அகில இந்தியச் சுற்றுலா உரிமங்களில் உள்ள வரி விதிப்புக் குறித்த பிரச்சினைகள் கொண்டு செல்லப்பட்டன. மாநிலங்களுக்கிடையே சுற்றுலாப் பயணிகள் வெகு சுலபமாக வந்து போகின்ற வகையில் இப்பிரச்சினையில் பொதுவான கருத்திற்கு வரப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையேயான ஒன்றுபட்ட ஒத்துழைப்புத் தன்மையின் மூலம் இக்கேள்விக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். கர்நாடக அரசுடன் பெங்களூருக்கும், பாண்டிச்சேரிக்கும் தமிழகத்தின் வழியில் சாலை மாற்றத்தை நிர்மாணிப்பதில் எங்களுடைய எண்ணங்கள் ஒத்துப்போகிற நிலைமை உருவாகியுள்ளது. சாலைப் போக்குவரத்துப் பிரச்சினையில் ஒரு விரைவான முடிவிற்கு வரவேண்டுமென்பது எனது கருத்தாகும். இந்த வழியில் கர்நாடக அரசு இரண்டு மாநிலத்திற்கிடையே பஸ் போக்குவரத்தினை அனுமதிப்பதில் தற்போதுள்ள செயல்பாட்டினை ஏற்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

# சென்னையில் தென் மாநில முதல்வர்கள் மாநாடு

**21**-வது தென் மாநில முதல்வர்களின் மாநாடு சென்னையில் 10-11-1992 அன்று நடைபெற்றது. 14 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் சென்னைத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்த மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு ஆந்திர முதல்வர், திரு. கே. விஜய பாஸ்கர ரெட்டி, அமைச்சர் திரு. ரோசையா, மாண்புமிகு கேரள முதல்வர், திரு. கருணாகரன், மேதகு புதுவை துணைநிலை ஆளுநர் டாக்டர் ஹர் ஸ்வரூப் சிங், மாண்புமிகு புதுவை முதல்வர், திரு. வி. வைத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். கர்நாடக மாநில முதல்வருக்குப் பதிலாக, அம்மாநிலத்தின் அமைச்சர் திரு. மல்லிகார்ஜுன் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டில், அமைச்சர்கள் திரு. எம். அருணாசலம், திரு. இராமேஸ்வர் தாகூர், திரு. எஸ்.பி. நியாமா கவுடா, டாக்டர் பலராம் ஜாக்கர், திரு. எம்.எம். ஜேக்கப் ஆகியோரும், தமிழக அமைச்சர்கள் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு திரு. அரங்கநாயகம், மாண்புமிகு கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாநாடு, காலை 10 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை சுமார் 3 மணி நேரம் நடைபெற்றது. மாநாட்டுக்கு வந்திருந்தவர்களை தலைமைச் செயலகத்தின் 10-வது மாடியிலுள்ள மாநாட்டு மண்டப நுழைவாயிலின் அருகே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வரவேற்றார்.

மாநாடு நடைபெறுவதையொட்டித் தலைமைச் செயலகத்தில் செய்யப்பட்டிருந்த அலங்கார ஏற்பாடுகளால் அப்பகுதியே விழாக்கோலம் பூண்டிருந்தது. தலைமைச் செயலகத்தின் நுழைவாயிலிலிருந்து மாநாடு நடைபெற்ற இடம் வரை பல வண்ணக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. மாநாட்டு மண்டபக் கட்டடத்தின் நுழைவாயில் அருகே வருபவர்களை வரவேற்க அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வரவேற்பு அரங்கம் அனைவரின் கண்களையும் கவர்ந்தன.

மாநாடு முடிந்த பிறகு, மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பகல் விருந்தளித்தார்.



சென்னையில் 10.11.'92 அன்று நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் மாநாட்டின் போது, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் குறித்து விவாதிப்பதற்கான தரப்பட்டிருக்கிற பொருள்களில் அநேகக் கருத்துகள் உள்ளன. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப விழிப்புணர்வை வளர்ப்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழுக்கள் பலமுள்ளதாக ஆக்கப் பட்டு அறிவியல் வளர்ச்சி மிகப் பெரிய செயல்பாடு உள்ளதாக அமைந்திட அக்கருத்தோடு நான் முழுவதும் ஐக்கியமாகிறேன். சென்னையில் அகில இந்திய ஜவகர்லால் நேரு அறிவியல் கண் காட்சியினை விரைவில் நடத்த விருக்கிறோம்.

அறிவியல் தொழில் நுட்பத்தை விளம்பரப்படுத்துகின்ற வகையில் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்தவிருக்கிறோம். நம்முன் உள்ள நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து நாம் அடிக்கடி எடுத்துரைக்கிற தன்மை யில் ஈடுபட வேண்டுமென்பது என் கருத்தாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் மிகப்பெரிய கழிவு நீர் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, சூரிய மின்சக்தி ஆகியவை குறித்து உட னடியாக நினைத்துப்பார்க்கிறோம். இதற்கு மூலதனமும் முன்னோடி தொழில் நுட்பமும் மிகப் பெரிய அளவில் தேவைப்படுவதால் இத் தகைய புதிய தொழில் நுட்பங்களை ஏற்பதற்கும் நடத்துவதற்கும் மத்திய அரசு உடனடியாக முடிவு செய்ய வேண்டியது தேவையாகிறது. நீண்ட விளக்கமான திட்டமான இவற்றை அணுகுவதற்கு மிகவும் உன்னிப்பாக இருக்கிறோம். இதைப் போலவே மற்ற அரசுகளும் ஆர்வம் உள்ளதாக இருக்கும் என நம்பு கிறேன். பாரதப் பிரதமர் அவர்கள் இத்தகைய எரிசக்தியை உருவாக்கு வதில் மிகுந்த ஆர்வமாக இருப்ப தால் மத்திய அரசு தனிச் சிறப்பு நிதியினை வழங்கும் எனக் கருது கிறேன். மலை வாழுநர் மேம்பாடு குறித்து சில பிரச்சினைகள் எழுப்பப் பட்டுள்ளன. தமிழகத்தில் மலை வாழுநரிடம் கொத்தடிமை முறை முழுவதுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

கொத்தடிமை முறை மீண்டும் வந்துவிடாமல், தடுக்கத் தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 500 பேர் வாழக்கூடிய மலை வாழுநர் கூட்ட மைப்பு என்கிற வகையில் அமைக்கு மாறு எனது கருத்தினை தெரிவிக் கிறேன். இதன் மூலமாக மலை வாழுநரின் மேம்பாடுகளை வளர்க் கச் சிறப்புத் திட்டங்களை உருவாக்க முடியும். ஆதிதிராவிடர்கள் மேம் பாட்டிற்காக ஒரு சிறப்புக் கூட்டுத் திட்டம் வகுக்கப்பட்டதில் ஒரு முன்னேற்றமான அடி எடுத்து வைக்கப்பட்டு 1991-92-ஆம் ஆண்டில் 11.77 சதவிகிதம் முன் னேற்றம் எட்டியுள்ளதை மகிழ்ச்சி கரமாகக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் மேலும் சிறப்பாகச் செய்வ தற்கு முடிவு செய்திருக்கிறோம்.

சந்தனக்கட்டை விஷயத்தில் ஒரு பொதுவான விதிமுறை வகுப்ப தற்கும், வனக்குற்றப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கும் பொருளில் குறிக்கப்பட்டிருப்பதை அறிகிறேன். வனக்குற்றங்கள் தொடர்பாக மாநி லங்களுக்கிடையே நல்ல ஒத் துழைப்பு இருக்க வேண்டுமென் பதை வலியுறுத்துகிறேன். எங் களைப் பொறுத்தவரை முழு அள வில் ஒத்துழைப்புத் தருவோம். பொதுவான சந்தனமர விதிகள் இருப்பதற்குத்தடை ஏதும் இல்லை. வெளிநாட்டிற்கு சந்தனக்கட்டை களை ஏற்றுமதி செய்கின்ற கொள் கையில் சில பிரச்சினைகள் இருக் கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறேன். 1992 ஏப்ரல் முதல் தேதி முதல் சந்தன மரங்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் ஒத்துழைப்புடன் தென் மண்டலக் குழு மாநிலங் களுக்கிடையே நல்லுறவுகளை உரு வாக்கும் ஒரு, மாதிரி மன்றமாகப் (Model Inter-State Forum) பரிணமிக் கும் என்ற நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

புதிய உறவுகளும், புதிய மன ஒற்றுமைகளும் உலகமெங்கும் பரவி வருகின்ற இந்தத் தருணத்தில், நம்மை நாமே புரிந்துகொண்டு, மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான புதிய பாலங்களை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும்.



★ ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறானோ, அப்படி எல்லாரிடமும்தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.

★ எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறி வைக் கொண்டு, ஆராய்ச்சி செய்து, சரி என்று பட்டபடி நட என்பதேயாகும்.

★ வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.



# புதியபாதை

## -மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து விவாதித்து முடிவெடுக்க மாண்புமிகு முதலமைச்சரும் திட்டக்குழுத் தலைவருமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில் 30.10.92 அன்று மாநிலத் திட்டக் குழுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு நிதியமைச்சரும், திட்டக்குழுத் துணைத் தலைவருமான டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், கீழ்க்கண்ட எட்டு உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்
2. டாக்டர் பி.பி. சுந்தரேசன்
3. டாக்டர் (திருமதி) ராஜம்மாள் பி. தேவதாஸ்
4. திரு. ஆர். திருமலை, இ.ஆ.ப. (ஓய்வு)
5. டாக்டர் எம். நடராசன்
6. திரு. கே.வி. பழனிதுரை
7. திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப., (தலைமைச் செயலர்)
8. திரு. என். நாராயணன், இ.ஆ.ப., (நிதித்துறைச் செயலர்)
9. திரு. எம்.பி. பிரானேஷ், இ.ஆ.ப., (திட்டம் & வளர்ச்சித்துறை)

திட்டக்குழுவின் செயலர் & உறுப்பினர் செயலர்

10. திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., (மாண்புமிகு முதல்வர் அவர்களின் செயலர்)

**மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை:**

**மாநிலத் திட்டக்குழுக் கூட்டத்திற்கு நான் தலைமை தாங்குவதைப் பெருமையாகக் கருதுகிறேன். தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக நாம் இங்கே கூடியுள்ளோம். நாம் பதவியேற்றபொழுது, திட்டமிட்ட வளர்ச்சி தொடருமா என்பதே சந்தேகமாக இருந்தது. இதுவரை இருந்திராத பொருளாதாரச் சிக்கலை நாம் சந்திக்க வேண்டியிருந்தது. திட்டமிடுதல் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமானால், கடந்த காலத் தவறுகளைக் கருத்தில் கொண்டு, மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்ய நாம் தவறினால் மக்களுடைய தேவைகளையும் குறிக்கோள்களையும் புறக்கணித்ததாகிவிடும். தேசிய வளர்ச்சிக் குழு அளவில் முன்னுரிமைகளை மாற்றியமைத்து புதிய சந்தர்ப்பங்களை ஆராய்ந்து, நம் முன் உள்ள பணிகளை வரையறுப்பது சாத்தியமாகி உள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதிகமான பண வீக்கம், குறைந்த உற்பத்தி என்னும் நிலைமையிலிருந்து நாம் விடுபட்டு, தொடர்ந்து வளர்ச்சியுறும் பாதைக்குச் செல்லவேண்டும். கடந்த காலத் தவறுகள், திட்டமிடும் முறையில் புதிய உத்வேகத்தைக் கொண்டு வருவதற்கான தேவை ஆகியவை எட்டாவது திட்டத்திற்கான தேசிய அணுகுமுறையைக் கட்டுப்படுத்தியிருக்கின்றன. இந்த மாறுதல்களையெல்லாம் மனதில் கொண்டு 8-வது திட்டத்திற்கான அணுகுமுறைக்குப் பொதுவான ஒப்புதல் அளிக்கின்ற அதே நேரத்தில் தமிழ்நாட்டிற்குத் தேவையான குறிப்பிட்ட திட்டங்களை வகுக்க முடிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.**

**எட்டாவது திட்டம் பெரும் பொருளாதார நிதி, நெருக்கடிகளுக்கிடையே தான் வடிவமைக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். மத்திய அரசையும் மாநில அரசுகளையும் இதே நிலைதான் சூழ்ந்திருக்கிறது. நிதிநிலைமை நிச்சயமாகத் திருப்தியளிப்பதாக இல்லை. 7-வது திட்டத்தில் இருந்த அளவுக்காவது 8-வது திட்டத்திற்கு நிதி ஒதுக்க இயலுமா என்பதே சந்தேகமாக உள்ளது. எனவே மாநிலத்தின் 8-வது திட்டத்தை நடைமுறை சாத்தியமாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது. ரூ.10,200 கோடி அளவுக்கு 8-வது திட்ட நிதிக்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். 7-வது திட்டத்தின் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடாக ரூ.5,750 கோடியை விட இது 77.39**

சதவிகிதம் கூடுதல் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்த நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு 8-வது திட்ட காலத்தில் அனேக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாகிறது. மாநிலத்தின் நிதி ஆதார நிலைமை பல ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டதாக இருப்பதால் நான் இதில் எந்தவித நீக்குப்போக்கையும் காட்ட இயலாது. அசாதாரணமான நிதி இடர்ப்பாடுகள் நிலவியபோதும் 8-ஆம் திட்டத்தை முழுமையாக்க முடிந்திருக்கிறது என்பதே மகிழ்ச்சியளிக்கக்கூடிய நற்சகுனமாக விளங்குகிறது. 1992-93-ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டை ரூ.1,751 கோடி அளவுக்குத் தீட்டியிருப்பதன் மூலம் 8-ஆம் திட்டத்திற்கான சரியான பாதையை நம்மால் சமைக்க முடிந்திருக்கிறது. இதுவே ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மாநிலத்தின் 8-வது திட்ட வடிவமைப்பிற்குத் தங்களது அனுபவக் களஞ்சியத்திலிருந்தும், அறிவுக் களஞ்சியத்திலிருந்தும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களை வழங்கியமைக்காக மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களாகிய - புகழ்பெற்ற வல்லுநர்களுமாகிய உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனைய வல்லுநர்களோடும் அலுவலர்களோடும் நீங்கள் நிகழ்த்திய விரிவான பேச்சுவார்த்தைகள் மூலம் உறுதியான, துரித வளர்ச்சிக்குத் தேவையான உத்திகளை உங்களால் வகுக்க முடிந்திருக்கிறது. நம் பணி, நம் கண்முன்னே வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளது. தொடக்கப் பிரிவில் (Primary Sector) நல்ல, பலதரப்பட்ட வளர்ச்சியை நாம் உறுதி செய்ய வேண்டும். இரண்டாவது பிரிவிற்கு (Secondary Sector) ஒரு புதிய வேகத்தை வழங்கக்கூடிய பல புதிய உத்திகளை எட்டாவது திட்டம் வழங்குகிறது.

வேளாண்மை மற்றும் அது தொடர்பான துறைகளில் சீரான வளர்ச்சியை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். வறட்சி நிவாரணப் பணிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். நீர்த்தேக்கங்களைச் சீர்படுத்துவது முக்கிய வளர்ச்சிப் பணியாகக் கருதவேண்டும். வெளிப்பரப்பு நீர் முழுவதும் (Surface Water) உபயோகப்பட்ட நிலையில்-நிலத்தடி நீர் (Ground Water) வேகமாக உபயோகப்படுத்தப்படுகின்ற சூழ்நிலையில், இது தமிழ்நாட்டிற்கு மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

இரண்டாவது பிரிவிற்குப் புதிய வேகத்தைத் தர புதிய தொழிற் கொள்கையை ஏற்கெனவே நாம் வகுத்துள்ளோம். தமிழ்நாட்டிலுள்ள அடிப்படை வசதிகள் நாட்டிலேயே தலைசிறந்ததாக விளங்க அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம். தமிழ்நாட்டில் மின்வெட்டே இல்லாத நிலையை உருவாக்க எடுக்கப்படும் தீவிர முயற்சியில் கூடுதலாக 1,630 மெகாவாட் மின்சக்தியை உருவாக்குவோம். வேகமான தொழில் வளர்ச்சி உருவாக வழிகோலும் வளர்ச்சி மையங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். நாம் வகுத்துள்ள இந்தத் தொலைநோக்குப் பார்வை நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

எட்டாவது திட்டத்தில் வறுமை ஒழிப்பிற்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்தத் திட்டங்களுக்கு ஆதாரங்களை வழங்கினால் மட்டும் போதாது. இதன் வழிமுறைகளையும் மக்களுடைய ஒத்துழைப்பையும் முக்கிய அம்சங்களாகும். இதுமட்டும்தான் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பெரும் வெற்றி பெறுவதை உறுதி செய்யும். மனிதவள மேம்பாட்டின் வெற்றிகரமான சாதனையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. வாழ்க்கைத் தரத்தை, குறிப்பாக ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை வேகமாக முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளை அடைய கல்வி, சுகாதாரம், உணவு, சமூக சேவை ஆகியவற்றில் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவோம்.

பரவலாக்கப்பட்ட திட்டம் (Decentralised Planning) மற்றும் **தொலைநோக்குத் திட்டம்** (Perspective Planning) உள்பட பல விஷயங்கள் நம் முன்னே உள்ளன. பதினைந்தாண்டுத் திட்டம் என்னும் நீண்ட கால யோசனையை நான் வரவேற்கின்றேன். ஏனெனில் நீண்ட கால முன்னேற்றத்திற்குத் தேவையான உத்வேகத்தை அளிக்கக்கூடிய மாற்றங்களை அளிப்பது அதில்தான் சாத்தியமாகும். திட்டங்களைப் பரவலாக்கும் போது மாவட்ட அளவில் பொறுப்புகளைக் கொடுத்து அவர்கள் பதில் சொல்லும் நிலைமையை (Accountability) உறுதி செய்யும் வகையில் நாம் புதிய திட்டத்தைத் தொடங்க வேண்டும். மாவட்ட அளவில் முடிவுகள் எடுக்கும் வகையில், மாவட்டத்திற்கு ஏற்ற வகையில் மாவட்டத் திட்டம் வகுக்கும் யோசனையை நாம் பரிசீலனை செய்ய வேண்டும். இப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள விடையை நாம் காண முடியும் என நம்புகிறேன்.

தமிழ்நாடு ஒரு புதிய வளர்ச்சிச் சந்திப்பில் உள்ளது. மிகவும் தைரியமாக நடவடிக்கைகள் எடுத்து முன்னேற வேண்டும்.

நாம் பல புதிய உத்திகளைப் பற்றி தைரியமாகச் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்நாடு சீரான வளர்ச்சிக்கான புதிய பாதையை வகுக்க முடியும். இந்த உரையுடன் தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி முடிவு செய்ய, விவாதங்களை இந்தக் கூட்டத்தில் தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி.

---

**தம்முடைய குழந்தைகளிடமும், நாட்டிடமும் அன்பு கொண்ட தம்பதிகள், குடும்பநலத் திட்டத்தைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.**

**— இந்திரா காந்தி**

# ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி



திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 453 நபர்களைத் தேர்ந்தெடுத்து, சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 2.11.92 அன்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்டத்தில் தொழில் தொடங்க 11 நபர்களுக்கு மூலதன மானியமாக ரூ.4.13 இலட்சமும், தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் ஒருவருக்குச் சுமை ஊர்தியும், 2 நபர்களுக்கு டீசல் டிரக்கும், வேன் வாங்க ஒருவருக்கும், ஆக ரூ.15.44 இலட்சம் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்பட்டது.

தாட்கோ மூலம் ஆட்டோ ரிக்ஷா வாங்க இருவருக்கும், இயந்திரக் கலப்பை வாங்க, ரைஸ் மில் யூனிட் அமைக்க, டிராக்டர் வாங்க மொத்தம் ரூ.8.65 இலட்சம் கடன், மற்றும் மானியமாகவும், கூட்டுறவு நிலவள வங்கி மூலம் 6 நபர்களுக்கு டிராக்டர் வாங்க ரூ.10.76 இலட்சமும், பூட்டு வியாபாரம் செய்ய ஒருவருக்கு ரூ.20,000-மும், நெசவுத் தொழில் செய்ய ஒருவருக்கு ரூ.10,000 கடனாகவும் வழங்கப்பட்டது.

மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வண்டி மாடுகள் வாங்க 26 நபர்களுக்கு ரூ.2.18 இலட்சம் மானியத்துடன் கூடிய கடனும், செம்மறி ஆடுகள் வளர்க்க 29 நபர்களுக்கு ரூ.2.29 இலட்சம் கடனுதவியும், பெட்டிக் கடை வைக்க 49 நபர்களுக்கு ரூ.2.69 இலட்சமும், சைக்கிள் கடை வைக்க 24 நபர்களுக்கு ரூ.1.44 இலட்சமும், இதரத் தொழில்கள் மேற்கொள்ள 89 நபர்களுக்கு ரூ.4.995 இலட்சம் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்பட்டது.

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் செம்மறி ஆடுகள் வளர்க்க, எரிசாணவாயு கலன் அமைக்க, மர அறுவை மில், மாவு மில் அமைத்தல் போன்ற தொழில்களுக்கென 41 நபர்களுக்கு ரூ.8.61 இலட்சம் கடன் உதவியும், கால்நடைப் பராமரிப்புத்துறை மூலம் செம்மறியாடு வளர்க்க 17 நபர்களுக்கு ரூ.1.378 இலட்சம் கடனுதவியும், தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியம் மூலமாக சிறுதொழில்கள் செய்ய 14 நபர்களுக்கு ரூ.1.80 இலட்சம் கடனுதவியும் வழங்கப்பட்டது.

பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் 5 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், சமூக நலத்துறை மூலம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் தொகையாக 78 பெண்களுக்கு ரூ.3.90 இலட்சமும், கலப்புத் திருமண நிதி உதவி 6 பெண்களுக்கும், விதவை மறுமண நிதி உதவி 3 பெண்களுக்கும், பார்வையற்றோர் திருமண நிதி உதவி ஒருவருக்கும், தையல் இயந்திரம் 2 பெண்களுக்கும், மூன்று சக்கர வண்டி இருவருக்கும், சக்கர நாற்காலி ஒருவருக்கும், காதொலிக் கருவிகள் இருவருக்கும், ஆக மொத்தம் 17 நபர்களுக்கு ரூ.60,000 மதிப்பீட்டில் வழங்கப்பட்டது. வருவாய்த் துறை மூலமாக 4 நபர்களுக்குக் குடும்பச் சேமநல நிதி உதவியாக ரூ.2.33 இலட்சமும், விபத்து நிவாரண உதவியாக ஒருவருக்கு ரூ.10,000-மும் வழங்கப்பட்டது.

மொத்தம், 453 நபர்களுக்கு ரூ.1,09,75,000 (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 239 பேர் பெண்களாவர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்:

# சலங்கை விழா

**குன்னக்குடி வைத்தியநாதன்**
தலைவர்:
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

இந்தியப் பாரதத்திலே நெடியதாம் ஒரு கலை பரதக் கலை. எவ்வளவோ கலைகள், இந்தியக் கலாச்சார அடிப்படையில், நமது நாட்டில் உலா வந்தாலும், பரதக் கலையின் சிறப்புக்கு ஈடு இணையே கிடையாது என்றே சொல்லலாம். எப்படி எனில், எந்த ஒரு கலை, இந்தியக் கலாச்சார அடிப்படையில் அமைந்த கலை, இறைவனை இணைத்து, வாழ்த்திப் பாடி, நாட்டிலே சிறந்ததாக இருந்தாலும், பரதம் என்ற நடனக்கலை அல்லது நாட்டியக் கலை, சகல வல்லமை படைத்த, சர்வேஸ்வரனான நடராஜப் பெருமானுடன் இணைந்த ஒரு காவியக் கலை. அந்த நடராஜ பெருமானின் வண்ண ஓவியமான அற்புதச் சிற்பத்தின் சொந்தமாக விளங்கும் இந்த நர்த்தனக் கலைக்குப் புகழுக்கு மேல் புகழாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

### அருள்பிரசாதமான கலை

ஆண்டவனின் அருள் பெற்ற, அருள் பிரசாதமான கலை. இதில் முக்கியமாக, இந்திய மண்ணின், அதிலும் தமிழகத்திலிருந்து பல வல்லுநர்கள், நாட்டிய சாஸ்திரத்தை உலக அளவில் பறைசாற்றி பெருமை அடைந்து பெரும் வழிகாட்டிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டியக் கலையில் முக்கியமாக இசையும், வார்த்தைகளின் ஓசையும், உடலின் அசைவும், எட்டு (8) திசையும் நோக்கி, நாம் அதை மனதில் லயித்து, நினைத்து, அதில் அசைபோட வைக்கிறது. நாட்டியக் கலையை நன்குணர்ந்து புலமை பெற்றவர்கள், பாடல்களிலும், இசையிலும், தாளத்திலும், பாவத்திலும் என்ன, இசை சம்பந்தப்பட்ட அனைத்து அமைப்புகளிலும் அவர்கள் வல்லவர்களாக விளங்குவார்கள்; அல்லது விளங்க வேண்டும். அதற்கு அவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

### நவரசங்களும் ஒன்று சேர்ந்த நளினமான கலை

ஒருவர் பரதத்தை நன்கு கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தால், ஒரு பாரம்பரியம் மிக்க குருவைத் தேர்ந்தெடுத்து, நாட்டிய சாஸ்திரத்தில் அவர் போதிய புலமை பெற்றிருக்கிறார் என்பதை அறிந்து, முழுமையாக அதே குருவிடம் கற்றுக் கொள்வது சாலச் சிறந்தது. அதே நேரத்தில், நல்ல நாட்டிய இசை ஆசிரியர்களைச் சந்தித்து, கண்டு, கேட்டு, நமது குருவின் ஆணைப்படி, நாம் எப்படி ஆடுகிறோமோ, அதனுடன் பல சிறந்த பாணியையும் பார்த்து, ரசித்து, நல்லவைகளைத் தேர்ந்தெடுத்து, சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதால், இந்த சாஸ்திரத்தில் முழுமை பெறலாம் என்பது என்னுடைய நோக்கம்.

தமிழகத்தில் எந்தத் தேவாலயங்களுக்குச் சென்றாலும், சிற்ப வடிவத்தில் இந்தக் கலை சிலிர்த்து நிற்கிறது. ஒவ்வொரு சிலையும் சொல்லும் அற்புதப் பாவங்கள், அகம் மகிழ வைக்கிறது. நவரசங்களும் ஒன்று சேர்ந்த நளினமான கலை இது. அழகு நங்கையர்க்கு, மங்கையர்க்கு ஏற்ற மாபெரும் புனிதக் கலை இது. புண்ணியம் செய்யும் பூவையர்களுக்கே பூஜைக்குரியது. இப்படி எவ்வளவோ சிறப்புகளை நடன கலைக்குச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக தமிழகத்தில் பரதக் கலை என்று சொல்லும்போது, நமது நாட்டின் பெயர் 'பாரதம்' என்று நாம் சொல்வது புரிகிறதா? ஆம். பாரதம் என்ற 4 எழுத்தில் பாவுக்குப் பிறகு கால் வாங்கியிருக்கிறது. அந்தக் காலை எடுத்தால், பரதம் என்ற கலையின் பெயர் வரும். பரத கலைக்குக் கால் எடுத்து தானே ஆட வேண்டும்? ''காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே'' என்று பாடுகிறோம். ''இடது





பதம் தூக்கி நின்றாடும் நடராஜன் அடி பணிவையே!'' என்று பாடவில்லையா? சரி, மறுபடியும் இடத்திற்கு வருகிறேன். பாரதத்தில் காலை எடுத்துவிட்டால், பரதம் என்ற கலையின் பெயர் வந்து விட்டது. இந்த 'பரதம்' என்ற வார்த்தையின் முதல் எழுத்தை எடுத்துவிட்டால், 'ரதம்' என்று வரும். ஆடும்



மங்கை ரதம் போல், ஆடி அசைந்து வர வேண்டும். அப்போது தான், அது பார்ப்பவர்கள் கண்களுக்கு அழகான விருந்து படைக்கும். 'ரதம்' என்ற வார்த்தையில் முதல் எழுத்தை எடுத்து விட்டால், ஆங்கிலச் சொல் ஒன்றை இங்கே சொல்ல விரும்பு கிறேன். அதாவது, 'Dham' . அந்த ஆடும் ஆரணங்கிற்கு 'DHAM' இருந் தால்தான், நடனம் முழுமை பெறும். அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக் கும் மக்களும், .....ம் என்று மகிழ்ச்சி அடைந்து பெருமைப்படுவார்கள்.

**சலங்கை விழா**

அண்மையிலே, இந்தக் கலையின் சிறப்புக்காக, வளர்ச்சிக்காக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலமாக, 'சலங்கை விழா' என்ற ஒரு சிறப்பான விழா சென்னை. தி.நகர், வாணி மகாலில், நவம்பர் 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை சிறப்பாக நடந்தது. ஒவ்வொரு நாளும், வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்காக மாலை யில் ஒரு நிகழ்ச்சியும், புலமை பெற்ற கலைஞர்களுக்குப் பிறகு ஒரு நிகழ்ச்சியும், ஒவ்வொரு நாளும் இரண்டு நிகழ்ச்சி களை இணைத்து ரசிகப் பெருமக்களின் கண்களுக்கும், காதுகளுக்கும் விருந்தாகப் படைக்கப்பட்டது.

நமது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விருப்பப்படி நல்ல கலைகளை வளர்க்கவும், அதில் புலமை மிக்கவர்களைப் பெருமைப் படுத்தவும், புதிய பல இளம் கலைஞர் களை இந்த நவபாரதத்தின் நவரசக் கலையான நாட்டியக் கலையில் நல்ல புலமை மிக்கவர்களாக ஆக்கவும், ஆக்கப் பூர்வமான இயக்கமாகிய இந்தத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலை மைப் பொறுப்பை அடியேனுக்குக் கொடுத் திருக்கிறார்கள். அவர்களின் இனிய ஆணைப்படி செயல்படுவதில், என்னு டைய செயலாக்கத்தைத் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லி,

# பார்த்தோம்-படித்தோம்

**படித்து மகிழ்ந்தேன்!**

***16.10.92*** இதழில், நாடகக் கலைஞர்களுக்கு நலம் சேர்க்கும் சலுகைகளைத் தமிழக முதல்வர் அறிவித்த செய்தியினைப் படித்து மகிழ்ந்தேன். இயல் இசை நாடகத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் வரவேற்கத்தக்கது.

-ப.முருகேசபாண்டியன்
சுரப்பாடி (கோவை மாவட்டம்)

**படித்துத் தெளிந்தேன்!**

தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் முழுமையாக நிலைநாட்டப்பட்டு அமைதி நிலவுகிறது என்கிற சட்டமன்ற உரையைப் படித்தேன். மிகவும் உன்னதமான முறையில் தெளிவுபட விளக்கி உள்ளதைப் படித்துத் தெளிந்தேன்.

—ஏ.சேகரன்
பெத்த நாடார்பட்டி
(திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)

**கவிதை-சிறப்பு**

கவிஞர் இளந்தேவன் அவர்களின் 'வடலூர் வள்ளல்' கவிதை சிறப்பாக இருந்தது.

—இன்பவல்லி வாசுதேவன்
கீரைச்சாத்து.

**கட்டுரை அருமை!**

பி.எல். இராசேந்திரன் அவர்கள் எழுதிய தமிழ் வளர்த்த பெரியார் வேத நாயகம் பிள்ளை அவர்களின் கட்டுரை மிக அருமை.

—எல். மாணிக்கம்,
வரைமாணிக்கம்
(புதுக்கோட்டை மாவட்டம்)

**இதழ்தோறும் வெளியிடுக!**

வேதநாயகம் பிள்ளை கட்டுரை போல, இதழ்தோறும் ஒரு தமிழறிஞர் கட்டுரை வெளியிட வேண்டுகிறேன்.

—வெ. சிவநேசன்
இராமச்சந்திரபுரம்
(கோவை மாவட்டம்)

**நிச்சயம் திருந்துவார்கள்!**

'குடிப்பழக்கமாம் உயிர்க் கொல்லி' பயனுள்ள கட்டுரை. இதைப் படித்தால் குடிகாரர்கள் நிச்சயம் திருந்துவார்கள்.

—வீ.இரஷ்யா
மானூத்து,
(மதுரை மாவட்டம்)

**தொடர்ந்து வெளியிடுக!**

'உயிர்க்கொல்லி குடிப்பழக்கம்' போல மதுவிலக்கு தொடர்பான கட்டுரையினைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

—வி.சென்றாயன்
கருப்பூர்,
(சேலம் மாவட்டம்)

**ஒவ்வொரு வரியும் அருமை!**

புலவர் தணிகை உலக நாதன் அவர்களின் 'குடியைக் கெடுக்கும் குடி' கவிதை ஒவ்வொரு வரியும் அருமை!

—ஸ்ரீநிவாஸ்பிரபு
சென்னை

'மாணவர் பக்கம்' பக்கத்தை அதிகப்படுத்தவும்.

—ர. பூபதி
பூனாம்பாளையம்

**பயனுள்ள கட்டுரை**

மீன் வளர்ப்புக் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

—கெ. அனந்தநாராயணன்
கன்னியாகுமரி.

---

கலைகளுக்கு எல்லாம் வரப்பிரசாதமாக இருக்கும், தமிழக முதல்வராகக் காட்சியளிக்கும் அவருக்கு நுண்கலை சம்பந்தப்பட்ட அனைத்துக் கலைஞர்களும், தங்களது நன்றிகளை, மலர் மாலைகளாகச் சமர்ப்பிக்கிறார்கள்.

இந்த விழாவை 'சலங்கை விழா' என்று ஏன் குறிப்பிட்டோம் என்றால், பரதக் கலையில் 'சலங்கை ஒலி' என்பது சாதாரண ஒலி அல்ல. ஆடுபவர்களுக்கு மந்திர ஒலி ஆகும். பதம் பாடும்போது, அந்தப் பாதங்களில் ஒலிக்கும் மணிகள் சரங்களாகக் கோக்கப்பட்ட அந்தச் சலங்கையின் மந்திர நாதம், மத்தள நாதத்துடன் (மிருதங்கம்) இணைந்து, மகத்தான மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

சலங்கையின்றி ஆட முடியாது. ஆடலாம், ஆடினால் அழகாக இருக்காது. பாபநாசம் சிவன் பாடலில் கூட, பாடலின் சரணத்தில், ''திருவடிச் சிலம்புகள் கலீர் கலீர் என'' என்று ஆரம்பித்திருக்கிறார். அந்தச் சிலம்பின் அல்லது சலங்கையின் இசைக்குக் 'கலீர்' என்று பெயரே சேர்த்திருக்கிறார். அதைச் சொன்ன இடம் இருக்கிறதே, அது பாடலின் சரணம். பாதத்திற்கு மறு பெயர் 'சரணம்' அல்லவா? ஆகவே, சரணத்திலே சலங்கையின் சப்தம் வருவது சரி என்று கூறுகிறாரோ சிவன் என்று நினைக்கத் தோன்றுகிறது.

**சலங்கைக் கலை**

பொதுவாக, நிகழ்ச்சிக்குப் பெயர் கொடுக்கும்போது, ''பரத நாட்டிய நிகழ்ச்சி'' என்றோ, ''நாட்டியக் கலை நிகழ்ச்சி'' என்றோ அல்லது 'நிருத்தியம்' என்றோ பல பெயர் கொடுத்து, இந்தக் கலையை அறிமுகப்படுத்தினாலும், 'சலங்கைக் கலை' என்று இக்கலையைச் சொல்லுவதில் எனக்கு என்னவோ ஒரு மகிழ்ச்சி ஊற்றெடுத்தது. அதன் அடிப்படையில் தான், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பல புதுமைகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், இந்த விழாவிற்குப் பெயர் வைக்கப்பட்டாலும், 'சலங்கை விழா' என்று பெயரிட்டு, நடனப் புலமை பெற்ற கலைஞர்கள் அனைவரும் இந்த விழாவை வாழ்த்திப் பாராட்டியதை நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

**சிறப்பாக வெளிவரும் 'தமிழரசு'**

மேலும், 'தமிழரசு' பத்திரிகை, சரியான கருத்துக்களையும், பற்பல அறிவுப் பூர்வமான விஷய தானங்களையும், சிறப்பான முறையில் தொகுத்து வழங்கி வருவது கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைவதுடன், எனக்கு இந்தச் 'சலங்கை விழா' பற்றி, 'தமிழரசு' மூலமாக எனது எண்ணங்களை வாசகர்களுக்கு வழங்க வேண்டும் என்று தெரிவித்து, நல்ல வாய்ப்பை எனக்குக் கொடுத்த 'தமிழரசு'-க்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

# உணவு-நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயல்பாடுகள் ஆய்வு



மாண்புமிகு தமிழக முதல்வர் 3.11.1992 அன்று காலை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயல்பாட்டை ஆய்வு செய்தார். இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு உணவு அமைச்சர், திரு. ஜி. விஸ்வநாதன், தலைமைச் செயலர், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலர், நிதிச் செயலர், முதல்வரின் செயலர், குடிமைப்பொருள் வழங்கு ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோரும் பங்கேற்றனர். இந்த ஆய்வின்பொழுது பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1992-ஆம் ஆண்டு ஏகபோகக் கொள்முதல் திட்டத்தின்கீழ், சம்பா பயிரில் 12.50 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு புதிய சாதனை படைக்கப்பட்டு உள்ளது. இது சென்ற சம்பா பருவத்தின் கொள்முதலைக் காட்டிலும் 2.00 இலட்சம் டன் அதிகமாகும். குறுவைப் பருவத்திலும் கொள்முதலில் கணிசமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறுவைப் பருவம் 15.12.1992-இல் முடிவடைந்தாலும், குறுவைக்கென நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் இலக்கான 4 இலட்சம் டன் நெல்லும் அக்டோபர் மாத இறுதிக்குள்ளாகவே அடையப்பட்டுவிட்டது சென்ற ஆண்டு குறுவைக் கொள்முதல் மொத்த அளவு 2.00 இலட்சம் டன்களே ஆகும்.

குறுவைக் கொள்முதல் இலக்கு, குறுவைக் கொள்முதல் காலம் முடிவுறும் முன்பே அடையப் பெற்றிருந்தாலும், காவிரி டெல்டாப் பகுதி விசசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கொள்முதலை மேலும் தொடர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அறிவுறுத்தினார். இதன்படி குறுவைக் கொள்முதல் மேலும் தொடரப்படும். இந்நிலையில் சுமார் 5.5 இலட்சம் டன் நெல் குறுவைப் பருவத்தில் மட்டும் கொள்முதல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே, சம்பா பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட சுமார் 12.50 இலட்சம் டன் நெல்லையும் சேர்த்து 1992-ஆம் ஆண்டு மொத்த கொள்முதல் சுமார் 18 இலட்சம் டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நெல் கொள்முதலில் ஒரு புதிய சாதனையாகும். 29.1.1992 அன்று வர்த்தகர் லெவி மூலம் கொள்முதல் செய்யப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது. அதற்கு முன் 5,000 டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. எனவே, 1992-ஆம் ஆண்டில் 17.95 இலட்சம் டன் நெல் விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் மூலமே பெறப்பட உள்ளது. இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

பொது விநியோகத் திட்டம் சீராகவும் செம்மையாகவும் நடைபெற எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதல்வர் ஆய்வு செய்தார். நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் சரியான எடையில் அரிசி வழங்கப்பட்டு, அதைக் கூட்டுறவுத் துறை பணியாளர் மேற்பார்வையில் நியாயவிலைக் கடைகளுக்கு லாரிகளில் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பொதுமக்களுக்கு நல்ல முறையில் வழங்கப்படுவதற்கான வழிவகைகளையும் ஆராய்ந்தார். சில நகர்ப்புற நியாய விலைக் கடைகளில் செவ்வனே பொருட்கள் வழங்கப்படுவதற்குச் சில சமூக விரோதிகள் ஊறு செய்வதைக் காவல் துறையின் உதவியுடன் முற்றிலுமாகத் தடுத்து நீக்கவேண்டுமென்று அறிவுறுத்தினார். நியாய விலைக் கடைகளுக்கு அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுக்கள் தங்களது பணிகளை, தீவிரமாகவும் தொடர்ந்தும் ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கிராமப்புற மக்கள் பெரும்பாலும் மாலை நேரத்திலேயே நியாய விலைக் கடைகளுக்கு வந்து பொருட்களை வாங்குவதையும், இந்த நியாய விலைக் கடைகள் பலவற்றில் மின்சார வசதி இல்லாததையும் சுட்டிக்காட்டி, அவற்றிற்கு மின்சார வசதி அளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்.

நியாயவிலைக் கடைகளுக்குத் தேவையான புதிய கட்டடங்களை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துமாறு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்

குடும்ப அட்டைதாரர்களுக்குப் புதிய குடும்ப அட்டை 1993 ஜனவரி மாதம் முதல் வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். புதிய குடும்ப அட்டை வழங்கப்படும்பொழுது, போலிக் குடும்ப அட்டைகளை முழுமையாக நீக்கி

விட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழு திருத்தியமைக்கப்பட்டு அதன் முதல் கூட்டத்தை 1992-ஆம் ஆண்டு இறுதிக்குள் கூட்ட வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்.

விவசாயப் பெருங்குடி மக்களின் கடன் சுமையைக் குறைக்கும் பொருட்டு அரசு அண்மையில் அறிவித்த போனஸ் திட்டத்தின்கீழ் விவசாயிகள் அடைந்த பயனைப் பற்றியும் முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்தத் திட்டத்தின்கீழ் 1.7.1991 அன்று நிலுவையில் உள்ள அசலையும் அதற்குப்பின் அவர்கள் செலுத்தவேண்டிய தொகையையும் 30.6.1992-க்குள் செலுத்தும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 1.7.1991 அன்றிருந்த தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்கான தொகையை அரசு போனசாக வழங்கும்.

இந்தத் திட்டத்தின் பலன் 30.9.1992 வரை நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 55.75 கோடி ரூபாய் அரசு போனசாக வழங்கியுள்ளது. சுமார் 4.48 இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைந்துள்ளார்கள். அவர்கள் திருப்பிச் செலுத்தியுள்ள தொகை ரூ.250.80 கோடி ஆகும்.

தொடக்க நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்படும் நீண்டகாலக் கடன்கள் ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தப்படாததால், மாநிலத்திலுள்ள 181 தொடக்க நிலவள வங்கிகளில் 38 வங்கிகளே நபார்ட் நிறுவனத்தின் மறு நிதியுதவி பெறத் தகுதியுடையதாய் உள்ளன. இதனால் நடப்பு ஆண்டில் இவ் வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடனளவு ரூ.41 கோடி தான். விவசாயப் பெருங்குடி மக்கள் நீண்டகாலக் கடன்கள் பெறுவதற்குச் சிறந்த சாதனமாக விளங்குகின்ற இத்தகைய நிலவள வங்கிகளை நபார்ட்டின் மறுநிதியுதவி பெறத் தகுதி உள்ளனவாக ஆக்கப்பட, வங்கிகள் தாங்கள் வழங்கிய கடனை வசூலிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். குறிப்பாக, திருப்பிச் செலுத்த வசதியும் வாய்ப்பும் இருந்தும், திருப்பிச் செலுத்தாதவர்களிடமிருந்து தொகை வசூலிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள மேல் நிலைப் பணியாளர்களுக்காக ஒரு பொதுவான பணிக்குழு (Common Cadre) அமைக்கப்படுவதைப் பற்றியும் முதல்வர் அவர்கள் ஆராய்ந்தார். இவ்வாறு ஒரு பணிக்குழு அமைக்கப்படுவதைக் கொள்கையளவில் ஏற்று, இதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு ஒரு அறிக்கையை விரைவில் அளிக்க ஒரு குழுவையும் அமைக்க முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

சட்டப்பேரவையில் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இத்துறைக்கான மானியக் கோரிக்கையின்பொழுது வெளியிடப்பட்ட அறிக்கைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் முதல்வர் அவர்கள் ஆராய்ந்தார்.

அதன்படி, நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறு வியாபாரதிற்கென ஒரு இலட்சம் பேருக்குக் கடன்கள் வழங்குவதற்கான குறியீட்டில், 48,562 பேருக்கு ரூ.28.62 கோடி கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. 17,479 பெண்களுக்குக் கடனாக வழங்கப்பட ரூ.11.01 கோடியும் இதில் அடங்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் முற்றிலும் மகளிராலேயே நடைபெறும் மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளை ஒன்று நிறுவப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி இதுவரை 11 மாவட்டங்களில் அனைத்து மகளிர் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் விரைவில் இத்தகைய கிளைகளைத் திறக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.



விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுக்குத் தேவையான அனைத்து இடுபொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்காக 100 துவக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வேளாண் இடுபொருள் அங்காடிகள் ஆரம்பிக்கப்படும். திட்டத்தின்கீழ் 100 அங்காடிகள் தொடங்கப்பட உள்ளன. ஒவ்வொரு அங்காடிகளும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ரூ.18,500 நிதியுதவி அளிக்கின்றது.

கூட்டுறவுத் துறையின் மூலம் இரண்டு கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஒன்று தருமபுரி மாவட்டம் பர்கூரிலும், மற்றொன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் தொடங்கப்பட்டுள்ளன.

# அரசின் சாதனைகள்

**- ஓர் ஆய்வு**

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் பணிகளை ஆய்வு செய்தார்.**

**மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., ஆகியோரும், அரசு உயர் அதிகாரிகளும் பங்கேற்ற இக்கூட்டத்தில் சென்ற ஆண்டு மற்றும் நடப்பு ஆண்டின் சாதனைகளும் முன்னேற்றங்களும் ஆய்வு செய்யப்பட்டன.**

**அப்போது ஆய்வு செய்யப்பட்ட மேற்கூறிய நான்கு துறைகளைப் பற்றிய குறிப்புரை பின் வருமாறு:**

**பொதுப்பணித்துறை**

எட்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இந்த ஆண்டு மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து குறித்த தேதியாகிய ஜூன் 12-ஆம் தேதி குருவைப் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் தஞ்சைத் தரணியில் 5 இலட்சம் ஏக்கரில் மிகச் சிறப்பான விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளது.

தஞ்சை கழிமுகப் பகுதியில் உள்ள வாய்க்கால், வடிகால் முதலியவற்றில் மண்டிக் கிடந்த மணல், செடி கொடி ஆகியவற்றை புல்டோசர்களைப் பயன்படுத்தி 1.20 கோடி ரூபாய் செலவில் முழுமையாக அகற்றி வாய்க்கால்களில் கடைமடைப் பகுதிவரைக்கும் தண்ணீர் சென்று பாயும் வகையில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

பெரியார் மற்றும் வைகை நீர்த்தேக்கங்களில் கிடைக்கப் பெற்ற நல்ல நீர்வரத்தை முன்னிட்டு, வரட்சிப் பகுதிகளாகிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டம் ஆகிய பகுதிகளில், 44,000 ஏக்கர் பரப்பளவுள்ள விரிவாக்கப் பகுதிகளுக்குப் பாசன நீர் திறந்துவிடப்பட்டது.

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 22 நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் 35,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதிப்படுத்தவும், இடைவெளிப் பகுதியான 8,500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் 58,300 ஏக்கர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி உருவாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு இவ்வாண்டு ரூ.27 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

காவிரி கழிமுகப் பகுதியில் வாய்க்கால் வடிகால்களை நவீனப்படுத்த ரூபாய் 4.50 கோடி அரசால் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் கடைமடைப் பகுதிகளில் பாசன வசதியும் வடிகால் வசதியும் கிடைக்கப்பெறும்.

கடலரிப்புப் பணிகளுக்காக ரூபாய் 4.25 கோடி நிதி, அரசால் ஒதுக்கப்பட்டு, வட சென்னையில் கடலரிப் பால் பாதிக்கப்பட்டுள்ள மீனவக் குடும்பங்களைப் பாதுகாக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 7 பாசன அமைப்புகளில் மேம்பாட்டுப் பணிகள் உலக வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென இந்த ஆண்டு ரூபாய் 17 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதன்மூலம் 3,21,000 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைகின்றன. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு சேத்தியாத்தோப்பு அணைக்கட்டைச் சார்ந்த கால்வாய்கள் மற்றும் வடிகால்களை மேம்படுத்துவற்காக அரசு ரூபாய் 7.60 கோடி அள்வில் அனுமதி வழங்கியுள்ளது. இதன்மூலம் 47,900 ஏக்கர் நிலங்கள் பயன்பட உள்ளன.

உலக வங்கி உதவியுடன் தமிழகத்தில் உள்ள 9 அணைகளைப் பாதுகாக்க ரூபாய் 42 கோடிக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த ஆண்டு இப்பணிகளுக்கு ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பேச்சிப்பாறை, மணிமுத்தாறு, வீடூர், கோமுகி, பொன்னணையாறு மற்றும் உப்பாறு அணைகள் வலுப்படுத்தப்படும்.

பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வைகை அணையிலிருந்து பெரியாறு முக்கியக் கால்வாய் தலைப்பு வரை இணைப்புக் கால்வாய் வெட்டுவதற்கு ரூ.25 கோடி செலவில் உலக வங்கி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் பெரியாறு முக்கியக் கால்வாயின் கீழ் உள்ள 85,500 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் சீரிய முறையில் பாசன வசதி பெறும்.

கிருஷ்ணா நீரை சென்னை மாநகருக்குக் கொண்டு வரும் திட்டத்தின் கீழ் பணிகள் முடுக்கி விடப்பட்டு இந்த ஆண்டு ரூபாய் 32 கோடி செலவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது. இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மார்ச்சுத் திங்கள் 1995-க்கு, ஒரு ஆண்டு முன்பாகவே, 1994 மார்ச்சுத் திங்களில் இத்திட்டம் முடிக்கப்பட உள்ளது. ஆந்திர மாநில முதல் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆந்திரப் பகுதி தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளைத் தீவிரப்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் 1995 ஜூன் திங்களுக்குள் சென்னைக் கிருஷ்ணா குடிநீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் 2-வது கட்டப் பணிகள் 150 பொதுப் பணித்துறை ஏரிகள்

★ கூட்டுறவு நிறுவனங்கள் சமூக முன்னேற்றத்தின் சாதனங்கள் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் 'ஆவின்' நிறுவனம் அடையாறு ஆவின் பாலகத்தை மனவளர்ச்சி குன்றியோர் உதவி நிறுவனத்தின் பொறுப்பில் விட்டுள்ளது.

மற்றும் 80 முன்னாள் ஜமீன் ஏரிகள் ஆக மொத்தம் 230 ஏரிகளை நவீனப்படுத்த ரூ.50 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**புதிய திட்டங்கள்**

1. காவிரி கழிமுகப் பாசன ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக ரூபாய் 952 கோடி அளவில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பாசன அமைப்புகளையும் மேம்படுத்துவதற்காகவும், பராமரிப்புப் பணிகளை முழுமையாகச் செய்து முடித்து, அதன் செயல் திறனை அதிகரிப்பதற்காகவும், ரூ.900 கோடி அளவில் உலக வங்கி உதவி பெறத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**முதல்வர் ஆலோசனை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறையின் பணிகள் குறித்து ஆய்வு செய்தபோது, இந்தத் துறையானது நீர்ப்பாசன நிர்வாகத்தினை நீர்ப்பாசனப் பொறியியல் அம்சங்களில் மட்டும் கவனம் செலுத்தாமல், பாசனம் செய்யப்பட்ட நீரானது கிராம அளவில் விளை நிலங்களில் எப்படித் திறம்படப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். ஏனெனில் விளை நிலங்களில் பாசன நீரானது திறம்படப் பயன்படுத்தப் படுவது விவசாயிகளின் பொறுப்பாக இருந்தபோதிலும், பொதுப்பணித்துறையானது தன்னுடைய அலுவலர்கள் மூலம் விவசாயிகளை நீர்ப்பாசன நீர் நிர்வாகத்தில் பங்கேற்கச் செய்து, தக்க ஆலோசனைகள் மற்றும் பயிற்சியை வழங்கி, பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தத்தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இது போன்ற விவசாயிகளை நீர்ப்பாசன நிர்வாகத்தில் நன்கு ஈடுபடுத்தி ஊக்குவித்தால், விவசாயிகள் மென்மேலும் சிறந்த முறையில் வேளாண் பணிகள் செய்ய உதவிகரமாக இருக்கும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை தெரிவித்தார்.

**சிறிய நீர்ப்பாசனம்**

சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் செயலாக்கப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்யும்பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் உள்ள நீர்ப்பாசன ஏரிகளைச் சீராக்குதல், நல்ல முறையில் பராமரித்தல், ஏரிகளின் கரைகள் பலப்படுத்துதல், கண்மாய்கள் பழுதுபார்த்தல், கால்வாய்கள் செப்பனிடப்படுதல், பாசன ஏரிகள் மற்றும் கால்வாய்கள் தூர் வாரப்படுதல் ஆகியவைகளை விரைந்தும், திறம்படவும் செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் பொதுப்பணித்துறையானது வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் பகுதிகளில் புதிய நீர்ப்பாசன ஆதாரங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து ஒருங்கிணைந்த திட்ட முன் மொழிவுகளைத் தயாரித்து விரைவில் செயல்படுத்த வேண்டும் என்றும் பொதுப் பணித்துறை அலுவலர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**நெடுஞ்சாலைத்துறை**

தமிழகத்தில் உள்ள அரசு சாலைகளின் பராமரிப்பிற்காகக் கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட குறைந்த நிதி ஒதுக்கீட்டின் காரணத்தினால் பெரும்பாலான சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இச்சாலைகளை 5 ஆண்டுகளில் சீரமைப்பதற்காக அரசு 150 கோடி ரூபாய் செலவில் 'பழுதடைந்த சாலைகள் சீரமைப்புத் திட்டம்' என்ற புதிய திட்டத்தினை 1991-92-இல் அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல், 581 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகள் ரூ.20 கோடி செலவில் பழுது நீக்கப்பட்டு, சீர் செய்யப்பட்டன. இத்திட்டத்திற்கு நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் ரூ.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8000 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகள் சீர் செய்யப்படவுள்ளன. இவற்றுள் ஆகஸ்ட் 1992 வரை, 2,737 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகள் சீர் செய்யப்பட்டுவிட்டன.

**பழுதடைந்த பாலங்கள்**

அரசு சாலைகள் உள்ள பெரும்பாலான பாலங்கள் கட்டப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும், அவற்றில் பெரும்பாலானவை தற்போதைய கனரக வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவையாக இல்லாததாலும் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இலாயக்கற்றவையாக உள்ளன. அண்மையில் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வின் படி, தமிழகத்தில் தற்போது அரசு சாலைகளில் சுமார் 3,401 பாலங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. இவற்றைத் திரும்பக் கட்டுவதற்குச் சுமார் 290 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவற்றின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு தமிழக அரசு நடப்பு ஆண்டில் 7 முக்கியப் பாலங்களை ரூ.247 இலட்சம் செலவில் திரும்பக் கட்டுவதற்காக நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான நடப்பு 1992-93-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.100 இலட்சங்களாகும்.

**பாலங்கள் - சாலை மேம்பாட்டுப் பணிகள்**

திட்டப்பணிகளின் கீழ், பகுதி 2 திட்டத்தின் கீழ், சாலை மேம்பாட்டுப்பணிகள், பாலப்பணிகள் ஆகியவற்றிற்கு அரசு ஆண்டுதோறும் அங்கீகாரம் அளித்துப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் 117 பாலங்களும், 129 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் 66 பாலப் பணிகளும், 104.50 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப்

பணிகளும் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டு, ஆகஸ்டு 92 முடிய, 37 பாலப்பணிகளும், 70.70 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**ஊரகச் சாலைகள் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், 1000-க்கு மேற்பட்ட மக்கட் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல் 186 கிராமங்களுக்கு 512 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் ரூ.15.36 கோடி செலவில் அமைக்கப் பட்டன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் 180 கிராமங் களுக்கு 500 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் ரூ.15 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் செல்லும் ஊராட்சி/ஊராட்சி ஒன்றி யச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு அரசு மற்றும் மாவட்டச் சாலைகளாகப் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் 762 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.22.80 கோடி செலவில் மேம்பாடு செய்யப்பட்டன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் 530 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.16 கோடி செலவில் மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

**கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், சென்னை திருவான்மியூரில் இருந்து கடலூர் வரையுள்ள 166 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை ரூ.75 கோடி செலவில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தேசிய நெடுஞ் சாலைத் தரத்திற்கு மேம்பாடு செய்யப்படவுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத் தின் கீழ், 166 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியை 7 மீட்டர் அகலமுள்ள ஓடு தளமாக அகலப்படுத்தவும், சாலையின் ஒரு தளத்தின் இருபுறமும் 1.50 மீ. அகலத்திற்குக் கடினப் பகுதியாகத் தரமுயர்த்த வும், 8 பெரிய பாலங்கள் 38 சிறுபாலங்கள் மற்றும் 21 குழாய்ப் பாலங்கள் கட்டப்படவும், 370.50 எக்டேர் பரப்புள்ள நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவும் வழிவகை செய்யப்படவுள்ளது.

நடப்பு ஆண்டு 1992-93-இல், ஆகஸ்ட் 92 முடிய 27 சிறு பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 8 பெரிய பாலங்கள், 45 சிறுபாலங்கள் கட்டும் பணியும், 42 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியைத் தரமுயர்த்தும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டத் திற்கு அக்டோபர் 92 முடிய ரூ.16.81 கோடி செல விடப்பட்டுள்ளது.

**சந்தைச் சாலைகள்**

இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு- அம்பேத்கர், தென்னார்க்காடு, தஞ்சாவூர், நாகப்பட்டினம்- காயிதே மில்லத், திருச்சி ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 19 சந்தை மையங்களுக்குச் செல்லும் 800 கி.மீ. நீளமுள்ள 176 ஊரகச் சாலைகளை ரூ.45.28 கோடி செலவில் உலக வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் நடப்பு ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 1995-96-இல் முடிக்கப்படும்.

**நகரிய மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், ரூ.133.60 கோடி மதிப்பீட்டில் 33 பணிகள் உலக வங்கியின் கடனுதவியுடன் மேற் கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ரூ.11.25 கோடி மதிப்பிலான 6 பணிகள் 1991-92-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிட்டன.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 29 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தரமுயர்த்தப்படவும், 5 சாலை மேம்பாலங்கள், 2 பெரிய பாலங்கள், 32 சிறுபாலங் களும், கட்டப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள் ஆகஸ்ட் 1992 முடிய 2 சாலை மேம்பாலங்களும், 12 சிறுபாலங்களும், 8.5 கி.மீ. நீள சாலை தரமுயர்த்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு ஆகஸ்ட் 1992 முடிய ரூ.8.27 கோடி செலவிடப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்**

உலக வங்கியின் கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும்



இத்திட்டத்தின் கீழ் சென்னை-திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை (எண்45-இல்) தாம்பரம் முதல் புக்கத்துறை வரையுள்ள 39.2 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியை 4 வழித்தடமுள்ள சாலையாக மேம்பாடு செய்யவும், புக்கத்துறை முதல் விழுப்புரம் வரையுள்ள 93.2 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியைத் தரம் உயர்த்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் செங்கல்பட்டு அருகே பாலாற்றின் மீது ஒரு பாலமும் மதுராந்தகம் மற்றும் விக்கிரவாண்டி ஆகிய ஊர்களுக்குப் புறவழிச்சாலை அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் புக்கத்துறை முதல் விழுப்புரம் வரையுள்ள சாலைப்பகுதியைத் தரமுயர்த்தும் பணி முடிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆரம்பம் முதல் செப்டம்பர் 1992 முடிய ரூ.53.14 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்**

தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளும், பராமரிப்புப் பணிகளும் மைய அரசின் நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் 26 கி.மீ. நீளமுள்ள சாலைப்பகுதிகள் தரமுயர்த்தப்பட்டன; 190 கி.மீ. நீளச் சாலைப் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன. மற்றும் 2 பாலங்களும் 19 சிறுபாலங்களும் கட்டி முடிக்கப்பட்டன.

நடப்பு 1992-93-இல் 80 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகளைத் தரமுயர்த்தவும், 3 சிறுபாலங்கள் மற்றும் 10 மிகச் சிறுபாலங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டு ஆகஸ்ட் 1992 முடிய 41 கி.மீ. நீள சாலைப்பகுதிகளைத் தரமுயர்த்தும் பணியும், 110 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகளைப் புதுப்பிக்கும் பணியும், 2 சிறுபாலங்கள் மற்றும் 6 சிறுபாலங்கள் கட்டும் பணியும் முடிக்கப்பட்டுவிட்டன.

**தேசிய நெடுஞ்சாலையில்**
**புதிய திட்டப் பணிகள்**

பெங்களூர்-சேலம்-மதுரை தேசிய நெடுஞ்சாலை (எண்.7)-யில் கிருட்டிணகிரியில் இருந்து ஓசூர் வரையிலான 61 கி.மீ. நீள சாலைப்பகுதியையும், மதுரையில் இருந்து திண்டுக்கல் வரையிலான 60 கி.மீ. நீள சாலைப் பகுதியையும் நான்கு வழித்தட அகலமுள்ள சாலைகளாக மேம்பாடு செய்திட மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான 'சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தனியார் மூலம் தயாரிக்க, மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆய்விற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்துதல்**

தமிழகத்தில், சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரையுள்ள 737 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையையும், 504 கி.மீ. நீளமுள்ள நாகப்பட்டினம்-கடலூர்-மைசூர் சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்திடும் திட்டங்கள் மாநில அரசினால் மைய அரசிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக்கப்படும்போது இதனைக் கருத்தில் கொண்டு இறுதியாக்கப்படும் என்று மைய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் காமராசர் மாவட்டம் அறிவொளி இயக்கத்தின் மூலம் முழு எழுத்தறிவுப் பெற்ற மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது நமது மாநிலத்தில் முழு எழுத்தறிவு பெற்ற மூன்றாவது மாவட்டமாகும். பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

**மைய சாலை நிதித் திட்டப் பணிகள்**

பாராளுமன்றத்தில் 13.5.1988-இல் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி பெட்ரோல், ஆயில், டீசல் ஆகிய பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையினால் மைய அரசிற்குக் கிடைக்கும் ஆயத்தீர்வையில், தமிழக அரசிற்குச் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.26.18 கோடி அளிக்கப்பட வேண்டும். இத்தீர்மானத்தின்படி 1988-89-இல் இருந்து 1991-92 முடிய உள்ள நான்கு ஆண்டுகளுக்கு ரூ.104.72 கோடி தமிழக அரசிற்கு அளிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் ரூ.392.78 கோடி மதிப்பிலான 576 பணிகளுக்கான பிரேரணைகள் மைய அரசிற்கு மாநில அரசினால் 6.6.90-இல் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இத்திட்டத்தின் கீழ் மைய அரசு, 1991-92-இல் ரூ.498.76 இலட்சம் மதிப்பிலான 8 பணிகளுக்கும், 1992-93-இல் ரூ.105 இலட்சம் மதிப்பிலான ஒரு பணிக்கும் மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள் தஞ்சை நகரில் அமைந்துள்ள குறுகிய ரயில்வே மேம்பாலத்தினை ரூ.250 இலட்சம் மதிப்பீட்டில் திரும்பக் கட்டும்பணி குறிப்பிடத்தக்கதாகும்.

**தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்**

தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் கயத்தாறு, புளியங்குளம், குமரி மாவட்டத்தில் முப்பந்தல், தூத்துக்குடிக்கு அருகில் முல்லைக்காடு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுல்தான்பேட்டை ஆகிய இடங்களில் அரசுத் துறையில் 105 காற்று மின் ஆலைகள் இது வரையில் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் மின் திறன் 16.05 மெகாவாட் ஆகும்.

1992 அக்டோபர் மாதம் 15-ஆம் தேதி வரையில் 86 மில்லியன் யூனிட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு மின் வாரியத்திற்கு இந்தக் காற்றாலைகள் வழங்கி உள்ளன. இது தவிர, தனியார் சார்பாக 26 காற்று மின் ஆலைகள் 6.5 மெகாவாட் அளவிற்குக் கயத்தாறிலும், முப்பந்தலிலும் நிறுவப்பட்டுள்ளன. ஆக மொத்தம் தமிழகத்தில் 22.55 மெகாவாட் அளவிற்குக் காற்று மின் ஆலைகள் மூலம் மின்சார உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

காற்றின் மூலமாக நீர் இறைத்து விவசாயத்திற்கும், குடிநீர்த் தேவைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இதுவரையில் 702 காற்றாலைகள் தமிழகத்தில்

நிறுவப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும், அனைத்துத் தமிழக மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப நிறுவப்பட்டு விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு எரி சக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக இதுவரை 1659 வீடுகளில் சூரிய ஒளி சுடுநீர்ச் சாத னங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவை தவிர 246 பெரிய அளவு சூடுநீர்ச் சாதனங்கள் தொழிற் கூடங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. 1991-92 ஆண்டுக்கு வீடுகளில் மட்டும் நிறுவப்பட வேண்டிய குறியீடான 200 சாதனங் களையும் தாண்டி 500 சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை 238 சூரிய அடுப்புகள் சமையல் தேவைக்காக மக்களுக்கு மாநில அரசு, மைய அரசு மானியங்களோடு கொடுக்கப்பட்டுள்ளன.

**சாண எரிவாயு**

தமிழ்நாடு எரி சக்தி வளர்ச்சி நிறுவனம் இதுவரை பெரிய அளவிலான சாண எரிவாயுக் கலன்கள் 46 நிறுவியுள்ளது. 1991-92- ஆம் ஆண்டு மட்டும் பெரிய அளவிலான சாண எரிவாயுத் திட்டங்கள் 7 முடிக்கப் பட்டுள்ளன.

**எரிசக்தி தாவரக் காடுகள்**

நெல்லை மாவட்டத்தில் 523 எக்டேர் பரப்பளவில் எரிசக்தி தாவரக் காடுகள் அமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாக இத்திட்டம் நடைபெற்று வருகின்றது. இவை முழுமையாக வளர்ச்சி அடைந்தபிறகு சுற்று வட்டாரத்தில் உள்ள மக்களின் தேவைக்குப் பயன் படுத்தப்படும். இத்திட்டம் திருவண்ணாமலை சம்புவ ராயர் மாவட்டத்தில் மேல் செங்கம் என்ற இடத்தில் 100 எக்டேர் பரப்பளவில் 1991-92-ஆம் ஆண்டில் துவக்கப் பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது.

**சக்தி தன் நிறைவுக் கிராமம்**

சக்தி தன் நிறைவுக் கிராமம் என்ற அடிப்படையில் 49 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு இந்தக் கிராமங்களில் 14.96 இலட்சம் ரூபாய் செலவில் மரபு சாரா எரி சக்தி சாதனங்களான மேம்படுத்தப்பட்ட அடுப்பு, மெட்டல் அடுப்பு, நீர் இறைக்கும் காற்றாலை, சூரிய ஒளி சக்தி யினால் இயங்கும் தொலைக்காட்சிப் பெட்டி, சூரிய ஒளி சக்தியால் இயங்கும் தெரு விளக்குகள், சூரிய ஒளி சக்தியால் இயங்கும் வீட்டு விளக்குகள் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. சூரிய ஒளி சக்தியினால் இயங்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் தமிழகத்தில் இதுவரை ரூ.5.16 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

★ பொது விநியோக முறையில் உணவுப் பொருள் வழங்க ரூ.2600 கோடி செலவாகிறது. இந்தியாவில் உள்ள மொத்தம் 3.8 இலட்சம் நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள் வழங்கப்படுகிறது. தொலைவுப் பகுதி யில் வாழும் 16 கோடி மக்களுக்கு உதவிட 1700 வட்டாரங்களில் 11,000 கடைகள் திறக்கப்படும்.

**ஒருங்கிணைந்த ஊரக சக்தி**

தமிழகத்தில் 13 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டார வளர்ச்சி ஒன்றியங்களில் (பஞ்சாயத்து யூனியன்களில்) ஒருங்கிணைந்த ஊரக சக்தி தன்னிறைவுத் திட்டம் அமல் படுத்தப்பட்டு வருகின்றது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.32 இலட்சம் செலவில் இந்த 13 பஞ்சாயத்து யூனியன் களில் மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் மெட்டல் அடுப்புகள், டீசல் நீர் இறைப்பான்களில் மேம்படுத்தப்பட்ட புட் வால்வுகள், நீர் இறைக்கும் காற்றாலைகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

மரபு சாரா எரி சக்தி வளர்ச்சித் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தியதற்காக மைய அரசு தமிழகத் துக்குச் சென்ற ஆண்டு சுழற்கேடயம் வழங்கிச் சிறப் பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**மின்வாரியத்தின் சாதனை**

இந்த அரசு பதவி ஏற்றபொழுது உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு உச்ச தேவையில் 30 சதவிகிதமும் மின் சக்தியில் 25 சதவிகிதமும் அமலில் இருந்தது. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக அனல் மின் நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டதாலும் புனல் நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு வரலாறு காணாத அளவில் இருந்ததாலும் மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு மின் உபயோகத் தில் இருந்த அனைத்துக் கட்டுப்பாடுகளும் 19.10.92 முதல் அறவே நீக்கப்பட்டுள்ளன. இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாண்டுகளுக்குப் பின்னர் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி மின்சாரம் வழங்கப்படுகிறது. இது நாம் பெருமைப்படக்கூடிய அரிய சாதனையாகும்.

**மின் நிலையங்களின் நிறுவுத்திறன் அதிகரிப்பு**

புதியதாக 224.67 மெகாவாட் அளவு நிறுவுத்திறன் கீழ்க்கண்டவாறு கூடுதலாக்கப்பட்டது.

| | |
|---|---|
| தூத்துக்குடி அனல் மின் திட்டம் - பிரிவு 4 | ... 210 மெ.வா |
| நரிமணம் வாயுச்சுழலி திட்டம் | ... 10 மெ.வா |
| புளியங்குளம் காற்றாலை | ... 1.5 மெ.வா |
| கயத்தாறு காற்றாலை விரிவாக்கம் | ... 0.2 மெ.வா |
| கயத்தாறு நெடுஞ்சாலையோரக் காற்றாலை | ... 0.22 மெ.வா |
| மரவக்கண்டி புனல் மின் திட்டம் | ... 0.75 மெ.வா |
| பூனாச்சி புனல் மின் திட்டம் | ... 2 மெ.வா |
| மொத்தம் | 224.67 மெ.வா |

**கூடுதல் மின் உற்பத்தி**

| | 1990-91 (ஜூலையிலிருந்து ஜூன் வரை (மில்லியன் யூனிட்டுகள்) | 1991-92 | %அதிகரிப்பு |
|---|---|---|---|
| புனல் | 3,829 | 4,632 | (+) 20.97 |
| அனல் | 9,433 | 9,960 | (+) 5.59 |

| | | | |
|---|---|---|---|
| மத்திய அரசு மின் நிறுவனங் களிலிருந்து வாங்கப்பட்ட மின்சாரம் | 8,037 | 8,664 | (+) 7.80 |
| மொத்தம் | 21,299 | 23,256 | (+) 9.19 |

இந்த ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் ரை 6,253 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| புனல் | ... 2185 |
| அனல் | ... 2376 |
| மத்திய அரசின் மின் நிறுவனங்களிலிருந்து வாங்கப்பட்ட மின்சாரம் | 1692 |
| மொத்தம் | 6253 |
| | மில்லியன் யூனிட்டுகள் |

இது கடந்த ஆண்டு இதே காலத்தில் உற்பத்தி செய்ததைவிட 10.2 சதவிகிதம் கூடுதலாகும்.

**வட சென்னை அனல் மின் திட்டம்**

இத்திட்டத்தின் அனைத்துக் கட்டுமானப் பணிகளும் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் 210 மெகாவாட் திறன் கொண்ட முதல் பிரிவு 1993 செப்டம்பர் மாதத்திலும் இரண்டாவது பிரிவு 1994 மார்ச் மாதத்திலும் மூன்றாவது பிரிவு 1994 ஜூன் மாதத்திலும் மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான தற்போதைய மதிப்பீடு ரூ.1405 கோடியாகும். ஆசிய வளர்ச்சி வங்கி இந்தத் திட்டத்துக்கென சுமார் ரூ.479 கோடி நிதி உதவி அளிக்கிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது கட்ட விரிவாக்கத் திட்டங்களுக்குத் தேவையான நிலக்கரியைத் துறைமுகத்திலிருந்து அனல் மின் நிலையத்திற்குக் கொண்டு வரும் வெளிப்புற நிலக்கரி கையாளும் அமைப்பின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.100.58 கோடி ஆசிய வளர்ச்சி வங்கி இத்திட்டத் திற்கு ரூ.68 கோடி நிதி உதவி அளிக்கிறது.

**பேசின் பாலம் எரிவாயு மின் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட 4 எரிவாயு மின் உற்பத்திப் பிரிவுகள் நிறுவப்படவுள்ளன. இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ.373 கோடியாகும். இத்திட்டத்திற்கென 11,450 மில்லியன் யென் கடன் வழங்க ஜப்பானிய அரசு இசைந்துள்ளது. இப்பிரிவுகள் 1994-95 ஆண்டில் செயல்படத் துவங்கும்.

கீழ்க்கண்ட புனல் மின் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. கீழ் பவானி வலதுகரைக் கால்வாய்
... 2×4 மெகாவாட்
2. சாத்தனூர் அணை புனல் மின் திட்டம்
... 1× 7.5 மெகாவாட்
3. பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம்
... 3×50 மெகாவாட்



● நீங்கள் கண்ணியமாக வாழவிரும்புகிறீர்களா? அப்படியானால் குடிப்பழக்கத் தீமையை விலக்கி விடுங்கள்!

—அண்ணல் காந்தியடிகள்

**சென்னைப் பெருநகர் மின் விநியோகம்**

சென்னைப் பெருநகர் மின் விநியோகத்தைச் சீர மைத்து மேம்படுத்தும் வண்ணம் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி 150 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கிறது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாக மின் விநியோகப் பிரிவில் முதன் முறையாக 230 கிலோ வோல்ட் மின் தொடர் புதைவடம் அமைத்தல், 230 கிலோ வோல்ட் வாயுக் காப்புத் துணை மின் நிலையம் அமைத்தல், மின் விநியோகத்தைச் சீராகக் கண்காணிக்க ஒரு நவீனக் கட்டுப்பாடு நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வுள்ளன. இத்திட்டம் 1994-95-இல் முடிவடையும்.

1991-92-ஆம் ஆண்டில் வரலாறு படைக்கும் அளவில் 41 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப் பட்டன. 419.9 கிலோ மீட்டர் நீள புதிய மிகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன.

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 13 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 217.1 கிலோ மீட்டர் நீள புதிய மிகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன. மேலும் இவ் வாண்டு இறுதிக்குள் 20 புதிய துணை மின் நிலையங் களும் 380 கிலோ மீட்டர் நீள புதிய மிக உயர் அழுத்த மின் பாதைகளும் நிறுவப்படவுள்ளன.

**புதிய மின் இணைப்புகள்**

இந்த அரசில் கடந்த ஜூலை 91 முதல் செப்டம்பர் 92 முடிய 5,23,990 புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 18,198 உயர் அழுத்த/தாழ் மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்குப் புதிய மின் இணைப்புக் கொடுத்ததும் அடங்கும்.

**சிறப்புச் சுயநிதித் திட்டம்**

ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் கட்டுப்பாடான நிதி நிலையைக் கருத்திற்கொண்டு 40,000 வேளாண்மை பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கப் பட்டு வருகிறது. மின்சார வாரியத்தின் நிதி நிலைமை யைக் கருதி புதியதொரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி பயன் பெற விரும்பும் விண்ணப்ப தாரர்கள் ரூபாய் இருபத்தைந்தாயிரம் அல்லது இணைப்பு களுக்குண்டான செலவு இவற்றில் எது அதிகமோ அதைச் செலுத்தி முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு பெற்றுக் கொள்ளலாம்.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 3,809 பம்புசெட்டு களுக்கு மின் இணைப்புக்கோரி மனுக்கள் பெறப்பட் டுள்ளன. இவற்றில் 1,715 பம்பு செட்டுகளுக்கு மின்

இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வருடாந்திர இலக்கான 40,000 விவசாய மின் இணைப்புகள் தவிர கூடுதலாக இந்த மின் இணைப்புகள் தரப்படுகிறது.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக 1992 செப்டம்பர் வரை 40,865 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 29,135 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சிறப்பு விருதுகள்**

1990-ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் சிறப்பு விருதைத் தூத்துக்குடி அனல் மின் நிலையம் 5-வது முறையாகப் பெற்றது. 1991-ஆம் ஆண்டிலும் இதே அனல் மின் நிலையம் ஆறாவது முறையாக மைய அரசின் சிறப்பு விருதைப் பெற்றிடும் தகுதியினை 69.95 சதவிகிதம் அளவு செயல்திறனை எட்டியதன் மூலம் பெற்றுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் காற்றின் மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு மின்சார வாரியமும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும் இணைந்து முதல் இடத்தைப் பெற்று மைய அரசின் பரிசைப் பெற்றுள்ளன. தொடர்ந்து இரண்டாம் முறையாக இவ்விருதினை நாம் பெற்றுள்ளோம். மேலும் 1989-90-ஆம் ஆண்டிலும் 1990-91-ஆம் ஆண்டிலும் காற்று மின் உற்பத்திப் பிரிவுகளைச் செம்மையாகப் பயன்படுத்திய மைக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.75 ஆயிரம் பரிசாகப் பெறப்பட்டது.

**நிலக்கரி தேவை**

அனல் மின் நிலையங்களில் இப்பொழுது நிலக்கரியின் மொத்தக் கையிருப்பு, சுமார் 7.23 இலட்சம் டன் ஆகும். இது தவிர 1.95 இலட்சம் டன் நிலக்கரி, ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினத் துறை முகங்களில் உள்ளது. மேலும் கோடை காலத்தில் நிலக்கரி பற்றாக்குறையின் காரணமாக அனல் மின் நிலையங்களில் மின்னுற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க நம் மாண்புமிகு முதலமைச்சரின் தீவிர முயற்சியால் 20 இலட்சம் டன்கள் உயர்ந்த தரமுள்ள நிலக்கரி, குறைந்த சுங்கவரி விதிப்புடன் இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் காரணமாக நம் அனல் மின் நிலையங்கள் கோடை காலத்தில் தடை இன்றி இயங்க முடியும்.

1500 மெகாவாட் திறன் கொண்ட பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையம் ரூபாய் 7,000 கோடி செலவில் அமைப்பதற்காக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிக் கழகத்துடன் கூட்டுத்துறை மூலமாக வேலை நடைபெற்று வருகிறது.

**தனியார் துறைகள் பங்கேற்பு**

தனியார் துறைகளின் மூலம் மின் நிலையங்களை அமைப்பதற்குக் கீழ்க்கண்ட திட்டங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன.

## ஊனமுற்ற குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு மானியத்தொகை உயர்வு!

### -மாண்புமிகு முதல்வர் ஆணை

தனியாரால் நடத்தப்பட்டு, அரசால் அங்கீகரிக்கப்பட்ட உடல் ஊனமுற்றோர் பள்ளிகளில் பயின்றுவரும் குழந்தைகளுக்கு, குழந்தை ஒன்றுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.30 வீதம் உணவு செலவுத் தொகை மானியமாக அரசால் 1976-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தொகை மிகவும் குறைவாக உள்ளதாகவும், இதை உயர்த்தித் தரவேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கைகள் வைக்கப்பட்டன. குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேற்படி தொகையை ரூ.90 ஆக 1.8.1992 முதல் உயர்த்தி உத்தரவிட்டு உள்ளார். இதனால் 1,200 ஊனமுற்ற குழந்தைகள் பயனடைவர்.

**அனல் மின் நிலையங்கள்**

| | |
|---|---|
| பிள்ளைப் பெருமாள் நல்லூரில் வாயுச்சுழலி | ... 300 மெ.வா |
| தூத்துக்குடி நான்காம் நிலை | ... 500 மெ.வா |
| கடலூரில் அனல் மின் திட்டம் | ... 1000 மெ.வா |

**புனல் மின் நிலையங்கள்**

| | |
|---|---|
| பேச்சிப்பாறை | ... 2 650 கி.வா |
| திருமூர்த்தி | ... 3 650 கி.வா. |
| துக்களப்பட்டி | ... 1 350 கி.வா |
| முக்குர்த்தி | ... 2 350 கி.வா |

மேற்கண்ட திட்டங்களுக்கான செயற்குறிப்பு தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

மேற்கூறிய திட்டங்களைச் செயலாற்றத் தனியார் நிறுவனங்கள் மிகுந்த ஆர்வம் காட்டியதால் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களையும் தனியார் துறையிடம் ஒப்படைக்க வாரியம் தீர்மானித்து அதற்கான விளம்பரத்தைச் செய்தித்தாள்களில் வெளியிட உள்ளது.

**அனல் மின் நிலையங்கள்**

| | |
|---|---|
| அ. வட சென்னை அனல் மின் நிலையம் III கட்டம் | ... 2×500 மெ.வா |
| ஆ. வேம்பார் அனல் மின் நிலையம் | ... 2×250 மெ.வா |

**டீசல் இஞ்சின் மின் நிலையங்கள்**

| | |
|---|---|
| அ. கடலூர் டீசல் இஞ்சின் மின் நிலையம் | ... 100 மெ.வா |

(—26ஆம் பக்கம் பார்க்க)

## அறிவொளி இயக்கம்



# வாழ்வின் விடிவெள்ளி அறிவொளி

- **இரா. கண்ணன்**
**பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர்**
**சென்னை**

கல்லாதவர்கள் கற்கிறார்கள்.
கற்றவர்கள் கற்பிக்கிறார்கள்.

தொண்டுள்ளம் கொண்டவர்கள்
தொடர்கிறார்கள் இயக்கத்தினை.

- அதுதான் அறிவொளி இயக்கம், தமிழகத்தின் பல மாவட்டங்களில் பார்க்குமிடமெல்லாம் அறிவொளி இயக்க முழக்கங்கள், வாசகங்கள்! மக்களின் இயக்கமாக மாபெரும் உருவெடுத்துப் பவனி வரும் ஓர் இயக்கமாக இது வளர்ந்து வருகிறது.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண் சுனைகள் இயற்றல்

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்

அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற பாரதியின் கூற்று பழ நினைவாய் அமையாமல், புதிய உருவம் பெற்றுப் பெரும் உலா வருகிறது.

இந்தியாவின் மாநிலங்களில் எழுத்தறிவு அதிகம் பெற்ற மாநிலமாம் கேரளத்திற்கு அடுத்து தமிழ்நாடு 63.72 சதவிகித கல்வியறிவு பெற்ற ஒன்றாகும். முழு எழுத்தறிவு பெற்ற மாநிலம் என்ற நிலை எய்திட எடுத்துக்கொண்ட முயற்சிகளில் இன்று ஒளி வீசி உலா வருவது அறிவொளி இயக்கமாகும்.

1976-ஆம் ஆண்டு தொடங்கிய பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் இதுவரை பயன்பெற்ற 78 இலட்சத்தினர் தவிர்த்து மேலும் சுமார் 82 இலட்சம் பேரினை அறிவொளி இயக்கத்தின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்களாக்கிட இவ்வியக்கம் செயல்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில் முதல் கட்டமாக புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி- கட்டபொம்மன், கன்னியாகுமரி, மதுரை, வட ஆர்க்காடு-அம்பேத்கர் ஆகிய ஏழு மாவட்டங்களில் செயல்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சீரிய தலைமையின்கீழ் மாவட்ட எழுத்தறிவுக் குழு அமைக்கப்பட்டு செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கம் தன்னார்வத் தொண்டர்களின் ஈடு இணையற்ற பெறும் முயற்சியினாலும் செயல்பாட்டினாலும் வெற்றியைப் பெற்று வருகிறது. இந்த இயக்கத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனப் பிரிதிநிதிகள் ஆகியோர் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர்.

அறிவொளி இயக்கத்திற்காகும் செலவினை இந்திய அரசும் மாநில அரசும் 2:1 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் நிறைவு பெற்று அம் மாவட்டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்களில் மேன்மை தாங்கிய ஆளுநர் அவர்கள் பங்கேற்று இம்மாவட்



**கற்போம் கற்பிப்போம்** **கற்போம் கற்பிப்போம்**



டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டங்கள் என அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு அமைச்சர்களும் இவ்விழாக்களில் பங்கேற்றுச் சிறப்புறச் செய்தனர். தமிழகத்தில் 1995-ஆம் ஆண்டிற்குள் எல்லா மாவட்டங் களிலும் அறிவொளி இயக்கம் செயல்படுத்தப் பட்டு தமிழகம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலம் என்று அறிவிக்கப்படும் வகையில் அறிவொளி இயக்கச் செயல்பாடுக்ளில் மூன்று சுற்றுகள் பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

### செயல் திட்டம்

**முதல் சுற்று - 1991-92-ஆம் ஆண்டு**

| வ. எண் | மாவட்டம் | வயதுப் பிரிவு | கற்போர் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | காமராசர் | 9-45 | 2.40 |
| 2. | பசும்பொன் | 15-35 | 1.00 |
| 3. | புதுக்கோட்டை | 9-45 | 2.90 |
| 4. | கன்னியாகுமரி | 15-35 | 0.84 |
| 5. | மதுரை | 15-35 | 4.20 |
| 6. | திருநெல்வேலி-கட்டபொம்மன் | 15-35 | 2.80 |
| 7. | வட ஆர்க்காடு-அம்பேத்கர் | 15-35 | 4.80 |
| | | | 18.94 |

**இரண்டாம் சுற்று - 1992-93-ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | 15-35 | 1.50 |
| 2. | கோயம்புத்தூர் | 9-45 | 5.00 |
| 3. | நாகப்பட்டினம்-காயிதே மில்லத் | 9-45 | 3.60 |
| | | 15-35 | 3.30 |
| 4. | திண்டுக்கல்-அண்ணா | 15-35 | 6.00 |
| 5. | சேலம் | 15-35 | 4.00 |
| 6. | பெரியார் | 15-35 | 4.60 |
| 7. | தர்மபுரி | 15-35 | 2.80 |
| 8. | சென்னை | 9-45 | 4.10 |
| 9. | தஞ்சாவூர் | 9-45 | 5.40 |
| 10. | தென்னார்க்காடு | 15-35 | |
| | | | 40.30 |

இவற்றில் இராமநாதபுரம், கோயம்புத்தூர், திண்டுக்கல்-அண்ணா, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிற மாவட்டங்களில் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

**மூன்றாம் சுற்று - 1993-94-ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | 15-35 | 8.53 |
| 2. | திருவண்ணாமலை-சம்புவராயர் | 15-35 | 4.43 |
| 3. | நீலகிரி | 15-35 | 0.62 |
| 4. | திருச்சி | 15-35 | 7.54 |
| 5. | சிதம்பரனார் | 15-35 | 2.00 |
| | | | 23.12 |

முழு எழுத்தறிவை எய்திட மாவட்டங்களான புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டங்களில் 'பயிற்றுப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்ற அளவில் தொழில் கல்வி, வாழ்க்கைக் கல்வி, நடைமுறைக் கல்வி போன்ற அத்துணை அம்சங்களும் அடங்கிய தொடர் கல்வித் திட்டத் தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அறிவொளி இயக்கத்தின் மூலம் பயன்பெற்ற வர்கள் தங்கள் வாழ்க்கைக்குகந்த ஒரு கல்வி முறையைப் பெற வேண்டும் என்பதற்காகத் தொடர்கல்வித் திட்டத்தின் மூலம் பல வளர்ச்சித் துறைகளின் பணிகள் பற்றியும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் அறிந்து கொள்ளும் வகையில் வாழ்க்கைக் கல்வியைக் கற்பிக்கும் வகையில் தொடர்கல்வி மையங்கள் அமையும். இம்மையங்களில் பிரச்சினைகளை விவாதிக்கும் விவாத அரங்குகளும், விளையாட்டு வசதிகளும், சிறிய நூலகம், செய்தித் தாட்கள் வசதியுடன் கூடிய வாசிப்பு வசதிகளும் ஏற்பாடு செய்யப்படும்.

1995-ஆம் ஆண்டில் தமிழகம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்படும் வகையில் அறிவொளி இயக்கப் பணிகளின் அத்துணை முயற்சிகளும், தேசிய எழுத்தறிவு இயக்கம் மற்றும் மாநில எழுத்தறிவு இயக்கங்களின் குறிக்கோள் களின்படி செயல்படுத்தப்படும். இக்குறிக் கோள்கள் வெற்றிபெற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உறுதுணையாக உள்ளனர் என்பதோடு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககமும் இப்பணியில் முழு முயற்சி யுடன் ஈடுபட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.



(—23 ஆம் பக்கம் தொடர்ச்சி)

| | |
|---|---|
| ஆ. சமயநல்லூர் டீசல் இஞ்சின் மின் நிலையம் | ... 100 மெ.வா |

**புனல் மின் நிலையங்கள்**

*1. மலை ஓடை திட்டங்கள்*

**அ. பெரிய/நடுத்தரத் திட்டங்கள்**

| | |
|---|---|
| பவானி கட்டளை அணைக்கட்டு முதல் கட்டம் | ... 90 மெ.வா |
| பரலயார் புனல் மின் திட்டம் | ... 25 மெ.வா |
| கொல்லி மலை புனல் மின் திட்டம் | ... 20 மெ.வா |
| பவானி கட்டளை அணைக்கட்டு இரண்டாவது கட்டம் | ... 30 மெ.வா |

**ஆ. சிறிய/நுண்ணிய திட்டங்கள்**

| | |
|---|---|
| தாழியார் புனல் மின் திட்டம் | ... 2×250 கி.வா |
| சிறுவாணி புனல் மின் திட்டம் | ... 1×3000 கி.வா |
| கள்ளர் பள்ளம் புனல் மின் திட்டம் | ... 1×5000 கி.வா |
| கீழ் கோத்த குடியாறு புனல் மின் திட்டம் | ... 1×5000 கி.வா |
| மஞ்சளார் புனல் மின் திட்டம் | ... 1×10,000 கி.வா |

**கால்வாய்த் திட்டங்கள்**

| | |
|---|---|
| அ. விலாம்பட்டி புனல் மின் திட்டம் | ... 1×500 கி.வா |
| ஆ. பூசாரி பட்டி புனல் மின் திட்டம் | ... 1×300 கி.வா |

**தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைகள்**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ள புதிய தொழிற்கொள்கையின்படி புதிய உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தில் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| முதல் ஆண்டு | ... 40 சதவிகிதம் |
| இரண்டாவது ஆண்டு | ... 30 சதவிகிதம் |
| மூன்றாவது ஆண்டு | ... 20 சதவிகிதம் |

மேலும் விரிவாக்கப் பிரிவுகளும் புதிய தொழிற் சாலைகளுக்குண்டான கட்டணச் சலுகைகளைப் பெறும்.

நூறு சதவிகித ஏற்றுமதி நிறுவனங்கள் எதிர்காலத்தில் மின்வெட்டிலிருந்து முழு விலக்குப் பெறும்.

புதிய தொழில் நிறுவனங்களுக்கு அவர்கள் மின் இணைப்பினைப் பெற்றுக் கொள்ளத் தயார் நிலையில் இருக்கும் பட்சத்தில் மூன்று மாதங்களுக்குள் மின் இணைப்பு வழங்கிட அனைத்து முயற்சிகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

**திட்டச் செலவுகள்**

1991-92-இல் மூலதன திட்டச் செலவு ரூ.536.99 கோடியாகும். திட்டம் சாராச் செலவு ரூ.54.40 கோடியாகும். இந்த ஆண்டு மூலதனத் திட்டச் செலவு ரூ.573.78 கோடியாக இருக்கும். திட்டம் சாராச் செலவு ரூ.91.07 கோடியாகும்.

1991-92-இல் மின்சார வாரியத்தின் வருவாய் ரூ.1760.71 கோடி. இந்த ஆண்டு இது ரூ.2064.36 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இந்தத் திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஓய்வுக் கால சேமநல நிதித் திட்டம் 1992 செப்டம்பர் திங்கள் 1-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி பணியிலிருந்து ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை ஓய்வு காலச் சேம நல நிதியாக வழங்கப்படும். இந்தத் தொகை ஓய்வு பெற்ற தொழிலாளி இறக்கும் வரை அவருக்கு மாதந்தோறும் வழங்கப்படும்.

ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குள் தொழிலாளி இறந்துவிட்டால் அவரது வாரிசுகளுக்குத் தொழிலாளி ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுக் காலம் கணக்கிடப்பட்டு, அதுவரை மாதந்தோறும் அவருக்குத் தரப்பட்ட ஓய்வூதியத் தொகை சேம நல நிதியாக வழங்கப்படும்.

தாமாக விரும்பி ஓய்வு பெறும் தொழிலாளர்களைப் பொருத்தவரை அவர்கள் இன்னும் எத்தனை ஆண்டுக்காலம் பணிபுரிய வேண்டுமோ அத்தனை ஆண்டுகளை (எட்டு ஆண்டுகளுக்கு அதிகம் இல்லாமல்) 15 ஆண்டுகளிலிருந்து கழித்த பிறகு வரும் காலத்துக்கு அவர்களுக்கு மாதந்தோறும் இந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

பணிபுரியும்போது ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அவரது வாரிசுகளுக்கு தற்போதுள்ள சலுகைகளுடன் 15 ஆண்டுக்காலத்துக்கான ஓய்வூதியம் மாதந்தோறும் வழங்கப்படும்.

பணி நீக்கம் செய்யப்படும் தொழிலாளியைப் பொருத்தவரை அவர் பணி நீக்கம் செய்யப்படும் நாள்வரை இந்தத் திட்டத்தின்கீழ் செலுத்தியுள்ள அவரது பங்குத் தொகையுடன் அதற்கான வட்டித் தொகையும் அவருக்குத் திரும்பத் தரப்படும்.

# கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழகத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன், நலிவுற்ற பிரிவைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக் களை ஏற்படுத்தவும், சுயமாக வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், மத்திய மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், நாய் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைத் தொடங்கிப் பராமரித்து, பொருளாதாரத்தினை மேம்படுத்துவது இத்துறையின் நோக்கமாகும்.

கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில், 1,416 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 18 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 9 வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு நாய் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கமும், ஒரு பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கமும், ஒரு கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் ஆகக் கூடுதலாக 1,446 கூட்டுறவுச் சங்கங்கள் 30.6.92-இல் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 2,33,906 உறுப்பினர்கள் உள்ளனர்.

ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்கெனத் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களும் மகளிருக்காகத்தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. விவசாயிகள் மற்றும் நிலமில்லாத கூலிகள் ஆகியோருக்கு வருவாய் கிடைப்பதற்காக ஆடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற தொழில்களுக்காகக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மூலமும் சங்கங்களின் சொந்த நிதியிலிருந்தும் வழங்கப்படுகின்றன.



ஆடு வளர்ப்புக்கு 1 அலகுக்கு ரூ.8,000 வீதம் கடனுதவி செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு உறுப்பினர்க்கு வழங்கப்படும் ஒரு அலகு என்பது, 20 பெண் ஆடுகளும், 1 ஆண் ஆடும் சேர்ந்தவையாகும். இதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு 50 சதவீதம் மானியமாகக் கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் அரசு உதவி பெற்று வழங்கப்படுகிறது.

உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்குவது தவிர, இறைச்சி வகை உயர்ரக ஆடுகளை இனவிருத்தி செய்யவும், அவற்றிற்காக மருத்துவப் பரிசோதனை, குடற்புழு நீக்கம் போன்ற மருத்துவ உதவிகளும் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏற்பாடு செய்து தரப்படுகின்றன. தேவைப்படும் உறுப்பினர்களுக்குத் தரமான ஆடுகள் வாங்கி விற்பனை செய்யவும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவி செய்கின்றன. இவற்றிற்கு ஈட்டுறுதிப் பாதுகாப்பும் செய்யப்படுகின்றன.

கோழி வளர்ப்பில், நவீன விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு இறைச்சிக்காகத் தனிவகைக் கோழிகளையும், புரதச் சத்து மிகுந்த அதிக

**டாக்டர் எஸ்.பி. அன்புமணி**
**இயக்குநர்,**
**கால்நடை பராமரிப்புத் துறை**
**சென்னை.**



முட்டையிடும் கோழி வகைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு, கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் கடன்கள் வழங்குகின்றன.

150 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பு இன ஆடுகள் அபிவிருத்தித் திட்டம் நடத்தவும், ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளது.

நலிந்த பிரிவினர் அதிகமாக வசிக்கும் மாவட்டங்களிலும், வறட்சிப் பகுதியான மாவட்டங்களிலும் பெருமளவில் கோழி வளர்ப்பைச் செயல்படுத்துவதற்குத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலம் 90 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு ரூ.123 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டமும், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதியுதவிக்காகத் தமிழக அரசால் பரிந்துரை செய்யப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

## பாசனமும் பயிரும்

● கிடைக்கக்கூடிய நீர் ஆதாரத்தைக் கொண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்கும் எண்ணத்தோடு நாட்டில் சுமார் 45 ஆயிரம் கோடி ரூபாய் பாசன வசதி மேம்பாட்டிற்காக நேரடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய பெரும் தொகை முதலீட்டின் விளைவாகப் பாசன வசதி 1950-51-இல் 22.6 மில்லியன் எக்டேராக இருந்தது. 1991-92-ஆம் ஆண்டு முடிவில் 83.4 மில்லியன் எக்டேராக அதிகரித்துள்ளது.

இதன் மூலம் மிகப்பெரிய நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன வேலைகள் முடிக்கப்பட்டு உணவு தானிய உற்பத்தியில் மிகப் பெரிய சாதனை அடைந்ததோடு தன்னிறைவையும் எட்டச் செய்துள்ளது.

இந்திய சுதந்திரத்திற்கு முன் 0.4 சதவிகிதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, சுதந்திரத்திற்குப் பின் பாசன வசதிகளினால் 2.6 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

1945-46-ஆம் ஆண்டில், அதாவது சுதந்திரத்திற்கு முன் பாசனத் திட்டங்களில் செலவிடப்பட்ட ரூ.149 கோடி ரூபாய்க்கு 7 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பிற்குப் பலன் கிட்டியது. பிறகு, இப்பலன் குறையத் தொடங்கியது. பல நோக்கு மற்றும் பெரிய பாசனத்திட்டங்களில் செய்யப்படும் முதலீடுகளுக்குத் தக்க பலன் கிடைக்கவில்லை. மாறாக நட்டமே ஏற்பட்டு வந்தது.

• 1987-88-ஆம் ஆண்டில் 1484 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆண்டிற்கு ஆண்டு பாசனத்தின் மூலம் ஏற்படும் இழப்பு அரசுக்குப் பெரும் கவலை அளிக்கும் பிரச்சினையாக இருந்து வந்தது. இதை ஆராய்ந்து தான் திட்டக் கமிஷன் பாசனத் தண்ணீருக்கு விலை நிர்ணயிப்பதற்காக உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பனை எண்ணெய்

● பண்டிகைதோறும் மக்களிடையே, குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பெண்களிடையே புழங்கும் ஒரு சொல் 'பாமாயில்'.

'ரேஷனில் தராங்களா என்ன?' இது பெண்களின் பண்டிகைக் காலக் கேள்வி!

இதனாலோ என்னவோ நம் நாட்டில் 1996-97-ஆம் ஆண்டின் இறுதிக்குள் எண்பதாயிரம் எக்டேர் நிலப்பரப்பில் செம்பனையை வளர்க்க மத்திய அரசு 94 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இப்பயிரில் செய்யப்படும் அதிக முதலீட்டையும் அது பலன்கொடுக்க ஆகும் காலத்தையும் கணக்கில் கொண்டே அரசு உதவித் தொகை வழங்க முன்வந்துள்ளது. முதலாண்டுக்குப் பனங்கன்று வளர்க்க எக்டேருக்கு 3,750 ரூபாய் அதிகமாகவும், அதையடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இடு பொருள்களுக்கு எக்டேருக்கு அதிக அளவில் 12,500 ரூபாய் வழங்கவும் முன்வந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், உற்பத்திக்கான தொழில் நுட்ப மிஷன், இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம், மத்திய உயிரியல் தொழில்நுட்பத்துறை, மத்திய அறிவியல், தொழிலியல் ஆராய்ச்சிக் கழகம், மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியில் உருவாகும் திட்டம் இது. பனை எண்ணெய் தனியார், கூட்டுறவு மற்றும் கூட்டுத்துறையில் உற்பத்தி செய்யப்படும். விதைப் பண்ணைகள் மூன்றும் பனைக் கன்று தோட்டப்பண்ணை பத்தும், செயல்முறை விவசாயப் பண்ணை மூலமாகவும் எக்டேர்களிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து 2000-வது ஆண்டில் நம் நாட்டில் பனை எண்ணெய் உற்பத்தி ஆண்டுக்கு 1.76 இலட்சம் டன்களாக இருக்கும். இது நாட்டின் எண்ணெய்த் தேவையைச் சமாளிக்க உதவும்.

'துவானம்'.

# திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை வளமாக்கும் பணிகள்

**திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தையும், திருவண்ணாமலை நகரையும் பசுமையான தாகவும், எழிலுடையதாகவும் உருவாக்க, பல திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் தன்னிறைவுத் திட்டமும், ஆதி திராவிட நலத்துறையின் பணிகளும் செவ்வனே செயல்பட்டு வருவதை இக்கட்டுரை விளக்குகிறது.**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தையும், திருவண்ணாமலை நகரையும் மரக்கன்றுகள் நட்டு பசுமையாக்கி, அழகுபடுத்தும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இச்சீரிய திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. தீனபந்து, [illegible], அவர்கள் தொடங்கி வை[illegible] வட்ட முழுமையாக மரக்க[illegible]றுகள் நடவும், திருவண்ணாமலை நகரில், மற்றும் திருவண்ணாமலை மலைப்பகுதிகளிலும் மரக்கன்றுகள் நடவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

இத்திட்டத்தின்படி, திருவண்ணாமலை நகரின் பல்வேறு பகுதிகளில், புங்கன், வேம்பு, புளியன், கொன்றை, அசோகா, இலவன் பஞ்சு, சவுக்கு, சிங்கப்பூர் பனை, முருங்கை, பப்பாளி, தென்னை போன்ற மரக்கன்றுகள் 12,000 நடப்பட்டுள்ளன. நகரின் முக்கியப் பகுதிகளில் பூங்காக்கள் அமைக்கப் பட்டு அவற்றில் குரோட்டன்ஸ் வகைச் செடிகள் நடப்பட்டு நகருக்கு அழகூட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

இச்சீரிய திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு அறிவித்தப்படி, ஆறாம் வகுப்புப் பள்ளி மாணவ மாணவிகள் 2000 பேர்களுக்கு, 500 தென்னங்கன்றுகளும், பப்பாளி, முருங்கை போன்ற 1,500 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டு உள்ளன. மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுக்கு மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை, உணர்த்தும் பொருட்டும் அவர்களது பெயரையே அம் மரக்கன்றுகளுக்கு வைக்கப்பட்டு பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவ, மாணவிகளும் அலுவலர்களும், பொதுமக்களும், மாவட்ட ஆட்சியர் திரு கே. தீனபந்து, அவர்கள் தலைமையில் திருவண்ணாமலை நகர்ப் பகுதியில் அக்டோபர் 7,8 தேதிகளில் 12,000 மரக்கன்றுகள் நட்டு, அனைவருக்கும் மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியது பாராட்டும் வகையில் அமைந்திருந்தது.

படைத்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டப் பணிகள் நடைபெறும் 1992 அக்டோபர் 7 மற்றும் 8 தேதிகளில் பொதுமக்கள் அனைவருக்கும் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப் படும் என அறிவித்து, மரக்கன்றுகள் வழங்கியது இச் சீரிய திட்டத்திற்கு முத்தாய்ப்பு வைத்தது போல் அமைந்தது.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 1980 ஏக்கரில் 21 இலட்சத்து 60 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலைப்

பள்ளி, மாணவ மாணவியர்கள் 10,000 பேர்கள் மரம் வளர்ப்பதன் பயன்கள், தேவைகள் ஆகியவற்றை விளக்கிடும் அட்டைகளை ஏந்தி முழக்கமிட்டு, திருவண்ணாமலை நகரில் ஊர்வலமாக வந்து பொது மக்களுக்கு மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினார்கள்.

இதைப்போலவே பள்ளி மாணவ மாணவியர், சாரண, சாரணியர்கள், நாட்டு நலத் திட்டப் பள்ளி மாணவர்கள் மிகவும் உற்சாகத்தோடு திருவண்ணாமலை மல்லைப் பகுதிகளில் 500 அடி உயரத்தில் 2000 மரக்கன்றுகள் நட்டு சாதனை

பகுதியைச் சுற்றி 8 ஆயிரம் ஏக்கரில் 1240 புளியமரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை நகரில் ஒரு தெருவில் மரக்கன்றுகள் நட்டால், அந்த மரக்கன்றுகள் அருகில் ஒரு வீட்டில் உள்ள குழந்தையின் பெயரை அந்த மரக்கன்றுக்கு வைத்து, அதை அந்தக் குழந்தையின் பெற்றோரையே பாதுகாக்கும் புதிய திட்டம் அமலபடுத்தப்பட உள்ளது. மாவட்ட அளவிலும், திருவண்ணாமலை நகரிலும் நடப்படும் மரக்கன்றுகளைப் பாதுகாக்க இரும்புக்

கம்பி வளையம் வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், மரக்கன்றுகள் வளர்த்த வகையில் மாவட்டத்தில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மொத்தம் இரண்டு கோடியே பதினாறு இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது. கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குக் கிடைக்கும் இப்பங்குத் தொகை பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும்.

எனவே, நாட்டுக்கும் வீட்டிற்கும் நன்மைகள் பல பயப்பதோடு இயற்கை வளத்தைப் பெருக்கவல்ல சீரிய திட்டமான மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டத்தில் அனைவரும் ஆவர்த்தோடு ஈடுபட்டு நாட்டில் பசுமைப் புரட்சி செய்து அரசுக்குப் பெருமை சேர்த்து நன்மைகள் பல அடைய பாடுபடுவோமாக!

★ ஜப்பான் நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியம் 23 மகளிர் கூட்டுறவாளர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. மகளிர் பிரச்சினைகளை நன்கறிந்த ஆறு வல்லுநர்கள் மற்றும் பத்திரிகையாளர்களும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். கூட்டுறவு அமைப்புகளில் மகளிர் பெரும்பகுதி பங்கு பெற ஆலோசனைகளை இக்குழு வழங்கும்.

## தன்னிறைவுத் திட்டப் பணிகள்

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள போளூர் செங்கம், வேட்டவலம், பெரணமல்லூர் ஆகிய நான்கு பேரூராட்சிகளில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் திட்டப்பணிகளை நிறைவேற்ற ரூ.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு கேட்டு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள 11 பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட உள்ளன. குப்பை அள்ளத் தற்சமயம் பயன்படுத்தப்படும் மாட்டு வண்டிகளுக்குப் பதிலாக மூன்று சக்கரச் சைக்கிள் வண்டிகள் 14 வழங்குதல், குடிநீர் வழங்கும் சிறிய இழுவை டேங்கர் வாங்கவும், தெருவிளக்குகளை அதிகரித்தல், 99 சாலைகள் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், 25 கழிவு நீர்க் கால்வாய் அமைத்தல் மற்றும் 3 சமுதாயக் கூடங்கள் கட்டுதல் போன்ற 228 பணிகள் மேற்கொள்ள இந்த நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

மேலும், பேரூராட்சிகளில் குடிநீர்க் குழாய்கள் அதிகரித்தல் மற்றும் பழுதடைந்த குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டத்தின் கீழ் அரசு ரூ.4.50 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இத்தொகையில் தேசூர் பேரூராட்சிக்கு ரூ.2 இலட்சம் வேட்டவலம், கண்ணமங்கலம், போளூர், களம்பூர், வந்தவாசி ஆகிய பேரூராட்சிகளுக்கு ஒவ்வொன்றுக்கும், ரூ.50 ஆயிரம் வீதம் செலவிடப்படத் திட்டமிடப்பட்டு பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

மேலும், சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசு மானியமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி உள்ளது. இத்தொகை செங்கம், போளூர் ஆகிய பேரூராட்சிகளுக்கு ரூ.50 ஆயிரம் வீதம் ஒதுக்கப்பட்டு மொத்தம் 11 பணிகள் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகின்றன.

சிறுசேமிப்பு சிறப்பு ஊக்குவிப்புத் திட்டத்தில் சிறப்புச் சாதனை புரிந்த வேட்டவலம் பேரூராட்சிக்கு ரூ.50 ஆயிரமும், கண்ணமங்கலம் பேரூராட்சிக்கு ரூ.10,000-மும் அரசு மானியமாகக் கிடைத்துள்ளது. இத்தொகையைக் கொண்டு வேட்டவலத்தில் ஒரு சிற்றுண்டிக் கடை கட்டும் பணியும், கண்ணமங்கலத்தில் குடிநீர்ச் குழாய் விரிவாக்கப் பணியும் நடைபெற்று வருகின்றன.

## ஆதிதிராவிடர் நலப் பணிகள்

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த 1992-93-ஆம் நிதியாண்டில் ரூ.2,31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலுள்ள 56 ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு இலவசச் சீருடைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கவும் மற்ற பிற பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடக் கிறிஸ்தவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்க மொத்தம் ரூபாய் ஒரு கோடியே 41 இலட்சம் இந்த நிதியாண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் பயன்பெறும் மாணவ மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 24,830 ஆகும்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர், மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ மாணவ மாணவியர்களுக்கு மேல் நிலைக் கல்வி பயில இந்த நிதி ஆண்டில் ரூ.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2 கோடியே 31 இலட்சத்தில் கல்விப் பணிகளுக்காக மட்டும் ரூபாய் ஒரு கோடியே 70 இலட்சம் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர்களுக்கான மத்திய சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ், 100 இந்து ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இராணுவம் மற்றும் காவல் துறையில் சேர, செங்கம் வட்டம் பரமனந்தல் கிராமத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ரூபாய் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 18 மாணவர் விடுதிகளும், 12 மாணவியர் விடுதிகளும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதியில் 1,229 மாணவர்களும், 649 மாணவியர்களும் தங்கிப் படித்து வருகிறார்கள்.

**பா. நாராயணமூர்த்தி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்**



# மது மனிதர்க்குப் பகை

—கவிஞர் பூங்கோவன்

ஆழ்கடலில் வீழ்த்திவிடும்; ஆற்றல் போக்கும்;
அறியாமை இருளினிலே மூழ்க வைக்கும்;
சூழ்கின்ற இன்னல்கள் கடுமை யாக்கும்;
சுற்றத்தைப் புறக்கணிக்கும்; சூது கவ்வும்;
ஏழ்மையாக்கும்; இரக்கின்ற நிலைஉண் டாக்கும்;
எள்ளிநகை யாடுவோர்க்கோ இடம ளிக்கும்;
பாழ்மனமே! போதையான 'மது'வைக் கண்டால்
பகைவனென்றே எண்ணிஉடன் விலகிப் போ!போ!

'மதுவேண்டும்' என்பார்கள் செல்வம் போக்க!
மடமையிலே வாழ்க்கைதனை தொலைத்து மூழ்க!
'மதுவேண்டும்' என்பார்கள் கல்வி நீக்க!
மண்ணிலுள்ள பெருமைகளை ஒழித்துக் கட்ட!
'மதுவேண்டும்' என்பார்கள் வறுமை யாக்க!
மயங்கிவீழ்ந்து சேற்றினிலே புதைந்து போக!
'மதுவேண்டும்' என்பார்கள் மானம் போக்க
மரியாதை போன்றவற்றை விட்டொ ழிக்க!

அறநெறியும் 'ஆற்றலெலாம்' அழிந்து போக
அன்புமனம் பாசமெலாம் குலைந்து போக
உறவினர்கள் உற்றார்கள் தொடர்பு போக
உண்மைநிலை என்னவென்றே மறந்து போக
திறமைநீங்கிச் சோம்பலிலே உழன்று போக
தேசத்தைக் கூசாமல் ஏசிப் பேச
மறதியினால் மனைவிமக்கள் விட்டுப் போக
'மதுவேண்டும்' என்பார்கள் இவற்றிற் காக?

போதை தரும் மதுவினாலே இன்ப முண்டோ?
பொல்லாத தீமையன்றோ வந்து சேரும்!
பாதையிலே முள்ளிருந்தால் களைதல் போல
பண்புதனைக் குலைக்கின்ற மதுவொ ழிப்போம்!
வாதுதரும் விடமென்றே ஒதுக்கி வைப்போம்;
வாழ்நாளை அழிக்கின்ற அரக்க னென்போம்!
மோதுகின்ற உணர்வுகளை நிறுத்தி வைத்து
முதுமையிலும் இளமையோடு திகழ்ந்து வாழ்வோம்!



# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# இந்திரா காந்தி வாழ்விலே...



*1917* - நவம்பர் 19. இந்திரா பிறப்பு.

*1922* - இந்திரா அகமதாபாத்துக்கு வந்தார். அண்ணல் காந்தியடிகளின் ஆஸ்ர மத்தில் தங்கினார்.

*1923* - டிசம்பர், இந்திரா மாடர்ன் பள்ளியில் சேர்ந்தார். கமலா நேருவுக்கு ஆண் குழந்தை பிறந்து இறந்தது. கமலா நேரு நோய்வாய்ப்பட்டார்.

*1926* - மருத்துவச் சிகிச்சைக்காகக் கமலா-நேரு சுவிட்சர்லாந்துக்கு அழைத்துச் செல்லப் பட்டார். அவருடன் இந்திராவும் சென்றார். இந்திரா இண்டர்நேஷனல் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இந்திரா, ரோமன் ரோலண்ட், ஐன்ஸ்டின், சர் ஜகதீஸ் சந்திரபோஸ், எர்னஸ்ட் டாலர், ரோஜர் பிட்வின் போன்றவர் களைச் சந்தித்தார்.

*1927* - தந்தை நேருவுடன் இந்திரா ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குச் சென்றார்.

*1927* - நேரு குடும்பம் இந்தியா திரும்பியது. இந்திரா அலகாபாத் செயிண்ட் மேரிஸ் கான்வெண்டில் சேர்க்கப் பட்டார்.

*1928* - ஜவகர்லால் தன் மகளுக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். இவைதான் பிற்காலத்தில் 'தந்தை மகளுக்கு எழு திய கடிதங்கள்' என்ற நூலாக வெளி வந்தன. இந்திரா, காந்தியடிகளின் சர்க்கா சங்கத்தைத் தொடங்கினார். மோதிலால் இரண்டாவது முறையாகக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சி யின் பொதுச் செயலாளராக ஜவகர்லால் நேரு தேர்ந்தெடுக்கப் பட்டார்.

*1929* - ஜவகர்லால் நேரு காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

*1930* - ஏப்ரல் 6

மோதிலால் நேரு தனது மாளிகை யைக் காங்கிரஸ் கட்சிக்கு அளித்தார். அது சுயராஜ் பவன் என்ற புதுப் பெயர் பெற்றது. இந்திரா அலகாபாத் தில் வானர சேனை என்ற அமைப்பை ஏற்படுத்தினார். சிறுவர் சிறுமிகளைக் கொண்ட அந்த அமைப்பு காங்கிரஸ் ஊழியர்களிடையே துண்டுப் பிரசுரங் களை எடுத்துச் செல்வது, தகவல் களைக் கொண்டு செல்வது, கொடி களைத் தயாரித்து அளிப்பது போன்ற பணிகளைச் செய்தது.

*1930* - அக்டோபர் 26

ஜவகர்லால் நேரு இரண்டாவது முறையாகத் தொடர்ந்து தன் மகள் இந்திராவுக்குக் கடிதங்கள் எழுதினார். இந்தக் கடிதங்கள் 1933-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் நாள் வரை தொடர்ந்து எழுதப்பட்டன. இவைதான் 'உலகச் சரித்திரம்' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளன.

*1930* - நவம்பர் 14

நேருவின் பிறந்தநாள் ஊர்வலத் திற்கு இந்திரா காந்தி தலைமை வகித் தார். நேரு சிறையிலிருந்ததால் அவரது பேச்சைக் கமலா நேரு படித்தார்.

*1931* - ஜனவரி 1

கமலா நேரு கைது செய்யப்பட்டார்.

*1931* - பிப்ரவரி 2

மோதிலால் நேரு மறைவு.

*1931* - ஜூன்

இந்திரா புனேயில் உள்ள பீப் பிள்ஸ் ஓன் பள்ளியில் சேர்க்கப் பட்டார்.

***1931*** - டிசம்பர்

ஜவகர்லால் நேரு மீண்டும் கைது செய்யப்பட்டார்.

***1932*** - பிப்ரவரி

புத்தகங்களை விரும்பிப் படிப்பது போல், இந்திரா காந்தி விளையாட்டு களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். மலையேறுதல் முதல் இந்திய நடனம் வரை அனைத்தையும் கற்றார்.

***1932*** - செப்டம்பர் 18

காந்தியடிகளை, அவர் இருந்த சிறைக்குச் சென்று சந்தித்தார் இந்திரா காந்தி.

***1924*** - ஜூலை - 1935 ஏப்ரல்

தாகூரின் சாந்திநிகேதனில் இந்திரா காந்தி படித்தார்.

***1935*** - மே

கமலா நேரு மருத்துவச் சிகிச்சைக் காக ஐரோப்பா சென்ற பொழுது இந்திரா காந்தியும் உடன் சென்றார்.

***1936*** - பிப்ரவரி 28

லாவ்ஸனேயில் கமலா நேரு இறந்தார்.

***1937*** - இந்திரா காந்தி ஆக்ஸ்போர்டு பல கலைக்கழகத்தில் படித்தார். அப் பொழுதுதான் அங்குப் படித்துக் கொண்டிருந்த பெரோஸ் காந்தி அவ ருக்கு நண்பரானார்.

***1941*** - இந்திராவும், பெரோஸ் காந்தியும் கப்பலில் தாயகம் திரும்பினர். வரும் பொழுது இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்தனர்.

***1942*** - மார்ச் 26

இந்திரா காந்தி-பெரோஸ் காந்தி திருமணம்.

***1942*** - ஆகஸ்ட் 7

பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் ஜவகர்லால், பெரோஸ் காந்தி, இந்திரா காந்தி மூவரும் கலந்து கொண்டனர்.

***1942*** - செப்டம்பர் 10

**அலகாபாத்தில் இந்திரா காந்தி பேசிய கூட்டத்தில் பிரிட்டிஷ் இரா ணுவ வீரர்கள் சூழ்ந்து கொண்டு அவரைக் குறிபார்த்துச் சுட முனைந் தனர். பெரோஸ் காந்தி குறுக்கிட்டுத் தடுத்தார். இந்திரா காந்தியும் பெரோஸ் காந்தியும் கைது செய்யப் பட்டு, நைனி சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.**

***1943*** - மே 13

வங்காளத்தில் ஏற்பட்ட கடும் பஞ் சத்தின் காரணமாக இந்திரா காந்தி விடுதலை செய்யப்பட்டார்.

***1944*** - ஆகஸ்ட் 20

இந்திரா காந்தியின் முதல் ஆண் குழந்தை ராஜீவ் பிறப்பு.

***1946*** - டிசம்பர் 14

இந்திரா காந்தியின் இரண்டாவது ஆண் குழந்தை சஞ்சை பிறப்பு.

***1947*** - ஆகஸ்ட் 15

நாடு விடுதலை அடைந்தது.

***1947-48***

காந்தியடிகளின் வேண்டுகோளின்படி, டில்லியில் வகுப்பு ஒற்றுமையைப் பராமரிக்கும் பணிகளில் இந்திரா காந்தி ஈடுபட்டார்.

***1948*** - அக்டோபர்

வெளிநாடுகளுக்குத் தன் தந்தை ஜவகர்லால் நேருவுடன் பயணம் மேற் கொண்டார்.

***1953*** - ஏப்ரல் 16

இந்தோனேஷியா பாண்டூங் மாநாட்டில் இந்திரா காந்தி கலந்து கொண்டார்.

***1953-54*** - இந்திரா காந்தி முதல் தடவையாக சோவியத் ரஷ்யாவுக்குச் சென்றார். 1954-இல் சீனாவுக்குச் சென்றார்.

***1955*** - ஏப்ரல்

பாண்டூங் மாநாட்டில் இந்திரா காந்தி கலந்து கொண்டார்.

***1955*** - செப்டம்பர் 19

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு உறுப்பினராக இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.



**★ மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இதுபோன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது; மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது!**

உலகம் முழுவதும் ஒரு குடும்பமே என்னும் உணர்வுடன் வாழ வேண்டும். இந்தக் கருத்தை இளவயதிலேயே குழந்தைகளின் மனத்தில் பதிக்கச் செய்ய வேண்டியது அவசியம்.



கல்வியின் பயன், பெருந்திரளான மக்களுக்குப் போய்ச் சேர்வதோடு, பின் தங்கிய மற்றும் அடித்தள மக்களின் நிலையை மேம்படுத்துவதற்காகவும் இருந்தால்தான் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

— இந்திரா காந்தி

1955 - செப்டம்பர் 22

அலகாபாத் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1958 - பிப்ரவரி 23

காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரி போர்டுக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

1959 - பிப்ரவரி 8 - 1960 ஜனவரி 18.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இந்திரா காந்தி பணியாற்றினார். மகாராஷ்டிர மாநிலம், கேரள மாநிலம் அரசியல் நிலைமைகளை அறியச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

1959 - டிசம்பர்

கேரள மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பொறுப்புகளை இந்திரா காந்தி கவனித்துக் கொண்டார்.

1960 - செப்டம்பர் 8

இந்திரா காந்தியின் கணவர் பெரோஸ் காந்தி மறைவு.

1960 - நவம்பர் 18

பாரிஸிலுள்ள யுனெஸ்கோ நிறுவனத்தின் நிருவாக வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் இந்திரா காந்தி.

1961 - ஆகஸ்ட்

இந்திரா காந்தி கென்யா, உகாண்டா, தான்சானியா, இரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

1963 - ஜனவரி 19

மத்திய மக்கள் குழுத் தலைவராக இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1963 - நல்லெண்ணப் பயணமாகப் பல ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்திரா காந்தி சென்றார்.

1964 - மே 27

பிரதமர் ஜவகர்லால் நேரு மறைவு.

1964 - ஜூன்

புதிய பிரதமர் லால்பகதூர் அமைச்சரவையில் செய்தி- ஒலிபரப்புத் துறையில் அமைச்சராகத் திருமதி இந்திரா காந்தி நியமிக்கப்பட்டார்.

1964 - ஆகஸ்ட் 20

மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1966 - ஜனவரி 10

தாஷ்கண்டில் லால்பகதூர் சாஸ்திரி மரணமடைந்தார்.

1966 - ஜனவரி 19

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அக்குழுவின் தலைவராகத் திருமதி இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1966 - ஜனவரி 24

இந்தியப் பிரதமராக இந்திரா காந்தி பதவி ஏற்றார்.

1967 - பிப்ரவரி

பொதுத்தேர்தலில் ரே-பெரேலி தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1967 - மார்ச் 13

இந்திரா காந்தி, இரண்டாவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்றார்.

1969 - ஜூலை 19

14 பெரிய வங்கிகளை நாட்டுடைமையாக்கினார் இந்திரா காந்தி.

1970 - டிசம்பர் 27, இந்திரா காந்தியின் ஆலோசனையின்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

1971 - மார்ச் 1-10

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியின் தலைமையிலுள்ள காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்றது.

1971 - மார்ச் 18

இந்திரா காந்தி, மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவி ஏற்றார்.

**1975 - ஜூன் 26**

குடியரசுத் தலைவர் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்.

**1977 - மார்ச் 21**

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியும், காங்கிரஸ் (இ) கட்சியும் தோற்றார்கள்.

**1977 - மார்ச் 21**

பிரதமர் பதவியை இந்திரா காந்தி ராஜினாமா செய்தார்.

**1978 - மே 15**

சிக்மகலூர் தேர்தலில் இந்திரா காந்தி வெற்றி பெற்றார்.

**1979 - ஜூலை 15**

திரு. மொரார்ஜி தேசாய் அமைச்சரவை பதவி விலகியது.

**1979 - ஜூலை 18**

திரு. சரண்சிங் பிரதமரானார்.

**1979 - ஆகஸ்டு 20**

சரண்சிங் ராஜினாமா செய்தார்.

**1979 - டிசம்பர் 15**

குடியரசுத் தலைவர் திரு. என். சஞ்சீவரெட்டி பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

**1980 - ஜனவரி 14**

காங்கிரஸ் (இ) தேர்தலில் வெற்றி பெற்றது. திருமதி இந்திரா காந்தி ரேபரேலி, மேடக் இரு தொகுதிகளில் இருந்தும் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1980 - ஜனவரி 15**

திருமதி இந்திராகாந்தி நான்காவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்றார்.

**1980 - ஜூன் 23**

திரு. சஞ்சய்காந்தி, எம்.பி. விமான விபத்தில் இறந்தார்.

**1983 - மார்ச்**

அணி சேரா இயக்கத்தின் தலைவராகத் திருமதி இந்திரா காந்தி டில்லி கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1984 - அக்டோபர் 31**

இந்திரா காந்தி இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு நடந்து செல்லும் போது, பாதுகாப்புக் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட வேதனை நிகழ்ச்சி நடைபெற்றது.



# தவப் புதல்வி

—பி.வி. கிரி

பாரதி பாடிய
புதுமைப் பெண்ணாய்
பாரதம் உயரப்
பாடு பட்டவர்!

சாந்தி நிகேதனின்
சிறந்த மாணவி
காந்தி வழிநின்று
கடமை புரிந்தவர்!

விடுதலைப் போரில்
வீரம் காட்டி
அடிமைத் தளையை
அறுத்த வீராங்கனை!

இதயம் கவரும்
இருபது அம்சம்
உதயம் இவரால்!
உயர்ந்தோர் பலராம்!
மேடை தோறும்
முழங்கிய சிங்கம்
சோடையே போகாத
சொக்கத் தங்கம்!

பண்டித நேரு
பாருக் களித்த
எண்டிசைப் புகழ்
இணையிலாத் தலைவி!

உலக மெங்கணும்
உலா வந்தவர்
திலகம் போலே
திகழ்ந்த பேரொளி!

தன்னல மின்றித்
தாய் நாட்டுக்கே
தன்னையே ஈந்த
தவப் புதல்வி!

# கலை உலகின் முழு நிலவு

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

—புலவர் தமிழ்ப்பித்தன்

எந்தக் கதையைச் சொன்னாலும் அதன் வாயிலாக ஒரு கருத்து- நீதி- வலியுறுத்திச் சொல்லப்பட வேண்டும் என்பதில் கலைவாணர் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார்.

அவர் கலை உலகில் காலடி எடுத்து வைத்து, நாடகங்களில் சிறுசிறு வேடங் களில் நடிக்கத் தொடங்கிய காலத்திலும் சரி, திரைப்பட உலகில் பவனிவந்து, வெள்ளிதிரையில் முக்கியமான வேடங் களில் காட்சி தந்த காலத்திலும் சரி, நீதி நெறிகளைப் பொதுமக்களுக்கு எடுத் துரைப்பதில் முனைப்பாகவே இருந்தார்.

திரைப்படத்தில் அவர் பங்குபெறும் காட்சிகளுக்குரிய கதை அமைப்பு, உரை யாடல்கள் ஆகியவற்றை அவரே அமைத்து வந்தார். பகுத்தறிவுக் கருத்துக் களை உரையாடல்களில் புகுத்துவதும்- மூட நம்பிக்கைகளுக்குச் சவுக்கடி கொடுப் பதும் அவரது வழக்கம். பிறர் மனம் புண் படாத வகையில், சீர்திருத்தச் கொள்கை களைத் திரைப்படங்களில் உலாவரச் செய்த பெருமை அவருக்கு உண்டு.

இந்நாளில் சமூகக் கதைகள் பொது மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெறு கின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பெல்லாம் சமூகக் கதைகள் அவ்வளவாக வெளிவரவில்லை. பெரும்பாலும் புரா ணக் கதைகளே திரைப்படங்களாக வெளி வந்தன. அதனால் புராணப் படங்களில் தான் அவரும் நடிக்க வேண்டியிருந்தது. என்றாலும், அந்தப் படங்களிலும் சீர் திருத்தக் கருத்தை- பகுத்தறிவுக் கொள் கையை மிக எளிதாக- வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல- எடுத்துச் சொல்லி விடுவார். இந்த வகையில் அவருக்கு இணை அவரேதான்!

நகைச்சுவைக் கலைஞன் என்பவன் உலகுக்கு அறிவூட்டத் தக்கவன் என்று அவர் பொதுமேடைகளில் குறிப்பிடுவ துண்டு. விஜயநகர மன்னரான கிருஷ்ண தேவராயரின் அவையில் அங்கம் வகித்த தெனாலி ராமனின் கதையைச் சான்று காண்பிப்பார். தெனாலிராமன் பற்பல சமயங்களில் நகைச்சுவையின் வாயிலாக மன்னருக்கு அறிவுரை வழங்கிய செய்தி களை எடுத்துரைப்பார் கலைவாணர்.

நமது தமிழ்த் திரைப்படங்கள் அந் நாளில் உருவாக்கப்பட்ட விதம் குறித்துப் பாவேந்தர் பாரதிதாசன் ஒரு முறை குறிப்பிட்டார்; அது வருமாறு:

பரமசிவர் அருள்புரிய
  வந்துவந்து போவார்
பதிவிரதைக் கின்னல்வரும்;
  பழையபடி தீரும்

பகுத்தறிவுக்கு ஓர் அங்குலம் கூட இடம் தராத அளவுக்குப் படங்களை உற்பத்தி செய்து கொண்டிருந்த கலை உலகைத் தனது கூர்மையான பார்வை யால் நோக்கினார் கலைவாணர். பகுத் தறிவுப் பிரச்சாரத்தை - சீர்திருத்தக் கொள்கைகளை- திரைப்படத்திலே துணிவோடு எடுத்துச் சொன்னார். ஒவ்வொரு படத்தின் வாயிலாக ஒவ் வொரு கருத்தை- நீதியை வலியுறுத் தினார். இருண்ட வீடாகக் காட்சி தந்த பட உலகத்திற்கு வெளிச்ச விருந்தை வாரி வாரி வழங்கினார். அவற்றில் ஓரிரண்டை இங்கே நினைவு கூர்வோம்.

சாலிவாஹனன் என்றொரு திரைப் படம். ரஞ்சன் கதாநாயகனாக நடித்து 1944-இல் வெளிவந்த அந்தப் படத்தில் கலைவாணர் நகைச்சுவைப் பாத்திரத்தை ஏற்றிருந்தார்.

தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண் ஒருத்தியைக் காதல் செய்கிறார்; அவளும் காதலிக்கிறாள்; காதல் வளர்கிறது; அந்தப் பெண்ணின் வயிற்றில் சிசுவும் வளர்கிறது. இந்நிலையில் அந்தப் பெண், தான் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒரு வரைக் காதல் செய்து விட்டோமே, அது கைகூடாதே என்று நினைத்துத் தன்னை மாய்த்துக் கொள்ள நினைக்கிறாள்- அதாவது தூக்குக் கயிற்றில் தொங்குவதற் குத் திட்டமிடுகிறாள். அந்தத் திட்டத்தை அறிந்து கொண்ட கலைவாணர், தக்க சமயத்தில் அந்த இடத்திற்குச் சென்று தடுத்தாட் கொள்கிறார்.

''நான் தாழ்ந்த சாதி'' நீங்க உசந்த சாதி, அதுனாலெ நம்ம காதல் நிறை வேறாது'' என்று அந்தப் பெண், கண்ணீர் வடித்தவாறு தெரிவிப்பாள்.

''அதென்ன ஒசந்த சாதி, தாழ்ந்த சாதி'' என்று கேட்டு விட்டு, ''ஆமா இந்த உப்பு இருக்குதே அதை நான் வாயில போட்டா கரிக்குது, ஒனக்கு எப்படி இருக்குது?'' என்று வினவுவார்.

''எனக்கும் கரிக்கத்தான் செய்யுது''- காதலி பதில் தருவாள்.

''சரி, இந்த மிளகாயைக் கடிச்சா எனக்கு உறைக்குது; ஒனக்கு...?''- அப்பாவிபோலக் கேட்பார்.

''எனக்கும் உறைக்கத்தான் செய்யுது''- காதலியின் பதில்.

''நீ உப்பைத் தின்னாலும் கரிக்குது, நான் தின்னாலும் கரிக்குது. நீ மிளகா யைக் கடிச்சாலும் உறைக்குது, நான் கடிச் சாலும் உறைக்குது! இதில எல்லாம் ஒரு வித்தியாசமுமில்லையே! அப்புறம் ஒசந்த சாதி, தாழ்ந்த சாதின்னு என்ன வித்தி யாசம்'' என்று வினாத் தொடுத்து, சமூகத்தில் இருந்து வந்த சாதி வேற்றுமை என்னும் இழிதன்மைக்குச் சாட்டையடி கொடுத்தார் கலைவாணர்.



*சிவகவி* என்னும் திரைப்படத்தில் (1943) கதாநாயகனான அம்பலவாணன் (தியாகராஜ பாகவதர்) காளியின் அருள் பெற்றுப் பொய்யாமொழி என்னும் பெயரும் பெற்றுக் கவிபாடும் திறமை எய்துகிறான். கதாநாயகனுடன் ஒரே குருகுலத்தில் கல்வி பயிலும் சரவண முத்து (கலைவாணர்) என்பவனும் காளி கோவிலுக்குச் சென்று வரம் கேட்க முனைகிறான். தனது நண்பன் ஒருவனை யும் தன்னுடன் அழைத்துச் செல்கிறான். சரவண முத்துவின் நோக்கம் உணர்ந்து கொண்ட அந்த நண்பன் அவனை எள்ளி நகையாடுகிறான்.

''உனக்கெல்லாம் காளி வரம் கொடுக்க மாட்டாப்பா'' என்கிறான் நண்பன்.

''ஏனப்பா கொடுக்க மாட்டா?'' என்று கோபத்துடன் வினவுகிறான் சரவணமுத்து.

''நீ இன்னிக்குக் குளிக்கவே இல்லை''- நண்பன் காரணம் கூறுகிறான்.

''குளிக்கிறதுக்கும் சாமி வரம் கொடுக் கிறதுக்கும் சம்பந்தமே இல்லப்பா! தெரிஞ்சுக்கோ!'' என்று தெரிவிக்கும் கலைவாணர் அடுத்தொரு விளக்கத்தை வழங்குகிறார்.

''நித்தம் நித்தம் நீராடி
நெடுமால் அருளைப் பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களுமத்
தனிப்பே றடைய வேண்டாவோ

அப்படின்னு ஒரு கவிஞர் பாடியிருக் கிறாரு.

தவளை, மீனு, ஆமை இதுகள்லாம் எப்பப்பார்த்தாலும் தண்ணீரிலதானே கெடக்குதுக! அதுகளுக்கு வரமா கெடைக் குது'' என்று வினாத்தொடுத்து, அரிய தொரு உண்மையைச் சுட்டிக்காட்டி 'உடல் சுத்தம் முக்கியமல்ல, உள்ளச் சுத்தம்தான் முக்கியம்' என்னும் கருத்தை மிக நுட்பமான விதத்தில் எடுத்துக் கூறுவார்.

சிவகவி புராணக் கருத்தமைந்த படம்; புராணப் பாத்திரங்கள் இடம் பெற்ற படம்; அந்தப் படத்தில் 20-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்தவரும்- நாஞ்சில் நாட்டவருமான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதை வரிகளை எடுத் தாண்டு, அவரிடம் தனக்கிருந்த பேரன் பைத் தக்க வகையிலே நிலைநாட்டி விட்டார் கலைவாணர்.

கடவுளின் பெயரைச் சொல்லிச் சமுதாயத்தில் எவரையும் ஏமாற்று கிறார்கள்; எந்தத் தவற்றையும் செய் கிறார்கள். இந்த இழிநிலையை அகற்ற வேண்டும் என்ற கருத்தைப் பல படங் களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

*மனோன்மணி* என்னும் திரைப்படத் தில் (1942) இந்தக் கருத்தை ஒரு துணைக் கதையாகவே உருவாக்கி, நகைச் சுவையை வழங்கி- அதன் வாயிலாகப் பகுத்தறிவு விருந்தை அளித்தார்.

வாழ்க்கையை வெறுத்த மணி என் பவன், துறவியாகிப் பிச்சை எடுக்கிறான். அப்போது ஒரு செல்வந்தரின் வீட்டு வேலைக்காரி ஒருத்தியைக் கண்டு காதல் கொள்கிறான். அந்த விநாடி முதல் சந்நியாச வாழ்வைத் துறந்துவிட்டு சம் சார வாழ்வில் ஈடுபடத் துடிக்கிறான். அந்தப் பெண்ணை அடைவதற்குரிய வழியைச் சிந்திக்கிறான். அவள் ஒரு செல்வந்தரின் மகள் என்பதையும் பின்னர் அறிந்து கொள்கிறான்.

ஒருநாள் பகல் வேளை. அந்தப் பெண்ணின் தந்தை தன் வீட்டு எரு மையை மேய்ச்சலுக்கு அனுப்பி, பின்னர் வீட்டுக்கு இழுத்துச் செல்லும்போது, மணி அந்த எருமையை அவிழ்த்து விட்டு விட்டு, அந்தக் கயிற்றிலே தன்னை இணைத்துக் கொள்கிறான். செல்வந்தர் கயிற்றை இழுக்க- அது மிகவும் கடினமாக இருக்க- உடனே அவர் திரும்பிப் பார்க்க- அங்கே மாட்டைக் காணோம்; மனிதன் நிற்கிறான்.

''அய்யா உங்களால் இன்று நான் சாப விமோசனம் பெற்றேன்; மாடாக இருந்த நானே மனிதனாகிப் போனேன்! நான் வருகிறேன்!'' என்று சொல்லிப் புறப்படுகிறான் மணி! செல்வந்தர் வியக் கிறார்; என்ன செய்தி என விசாரிக் கிறார். ''பகவான் கிருஷ்ணரின் சாபத் தால் மாடாக இருந்ததாகவும், இன்று செல்வந்தரால் விமோசனம் பெற்று விட்டதாகவும், தான் தேவலோகத்தைச் சேர்ந்தவன் என்றும் பொய் சொல் கிறான். அதைக் கேட்ட அந்தச் செல்வந்தர் வியப்படைந்து, மணியைத் தன் வீட்டுக்கு வருமாறு வேண்டி, அழைத்துச் சென்று, மகளிடம் அறிமுகம் செய்து வைக்கிறார். தனது வீட்டிலேயே தங்க வேண்டும் என் றும் வேண்டுகிறார். மணிப்பண்டாரம் ஒப்புக் கொள்கிறான். எல்லையற்ற மகிழ்ச்சியுறுகிறான்.

இப்படியே சில காலம் செல்ல, செல் வந்தரின் மாடு ஒரு நாள் திரும்பிவந்து விடுகிறது. மணிப் பண்டாரத்தின் குட்டு உடைகிறது; உண்மையை அறிந்த செல் வந்தர் துடிக்கிறார்; வெடிக்கிறார்; 'வீட்டை விட்டு வெளியே போ! என அவனைத் துரத்தி அடிக்கிறார். அப் போது அவரது மகள், ''அப்பா அவரை அனுப்ப வேண்டாம்; அனுப்பினால் நானும் அவருடனேயே போய் விடு வேன்'' என்று உறுதியுடன் கூற, வேறு வழியின்றி அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிறார் செல்வந்தர்.

பொய் சொன்னால் மக்கள் கொஞ் சங்கூட யோசித்துப் பார்க்காமல், ஏமாந்து விடுகிறார்கள் என்ற கருத்தை எடுத் துரைத்ததுடன், காதல் திருமணம் நாட்டில் நடைபெற வேண்டும் என்பதையும் வலி யுறுத்துகிறார் கலைவாணர்.

அறிவியல் கருத்துக்கள் நாட்டில் பரவ வேண்டும் என்பதில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர் கலைவாணர்- 'நல்லதம்பி' என்னும் படத்தில் (1949) அறிவியல் வளர வேண்டும் என்னும் கருத்தை உடுமலை நாராயண கவியைக் கொண்டு பாடலாக உருவாக்கி- முழங்கு கிறார். பாடலின் வடிவமைப்புதான். கவிராயரின் பணி; பாடலுக்குரிய கருத்துக்களை வழங்கியவர் கலைவாணர் தான்.

தன் மனைவியிடம் தெரிவிப்பது போல் அமைந்த அந்தப் பாடல் வருமாறு.

விஞ்ஞானத்தை வளர்க்கப் போறண்டி
—மேனாட்டாரை
விருந்துக் கழைச்சுக் காட்டப்
போறண்டி
தஞ்சாவூரு ஏட்டை நிறுத்தி
தலைகீழா பாடம் படிச்சு
பொஞ்சாதி புருஷன் இல்லாமெ
புள்ளையும் குட்டியும்
பொறக்கிறாப்புலே. (விஞ்)

தந்தை பெரியார் 1943-இல் 'இனி வரும் உலகம்' என்ற நூலில் எழுதிய கருத்தைத்தான் 'பொஞ்சாதி புருஷன் இல்லாமெ புள்ளையும் குட்டியும் பொறக் கிறாப்புலெ' என்று கூறுகிறார் கலைவாணர். இன்று உலகப் புதுமையாகத் திகழும் Test ube baby என வழங்கப்படும் சோதனைக் குழாய்க் குழந்தையைத்தான் கலைவாணர் இந்தப் பாடலில் சுட்டிக் காட்டுகிறார். அறிவியல் வளர்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வம் இந்தப் பாடல் வரிகளால் பளிச்சென விளங்குகிறது.

பாடலின் அடுத்த வரிகள் பண்பிலே புடம்போட்டு எடுக்கப்பட்டவை; அவை வருமாறு

அஞ்ஞானத்தை அழிக்கப் போறேண்டி
—அணு சக்தியாலே
ஆயுள்விருத்தி பண்ணப் போறேண்டி
அடுத்த நாட்டுக் காரன்போலெ
ஆளைக் கொல்லாமெ- ஊரைப்
பாழு பண்ணாமெ-தீமை (அஞ்ஞான)

அணு ஆற்றலை எரிசக்தி குண்டாக ஆக்கி- ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிரோசிமா- நாகசாயி நகரங்களில் அதனைப் போட்டு அன்றைக்கு வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்ததுடன், இன்றைக்கு வாழ்ந்துவரும் தலைமுறையினருக்கும் பாதிப்பை ஏற்படுத்திய பாதகர்களின் தீய செயலை எண்ணினால், மனித சமு தாயமே நடுநடுங்குகிறது. அதனால்தான் 'ஆளைக் கொல்லாமெ- ஊரைப் பாழு பண்ணாமெ - ஆக்க வேலைக்கு அணு சக்தியைப் பயன்படுத்த வேண்டும்' என்ற நீதியை- இந்தப் பாடலில் தெரிவிக்கிறார் கலைவாணர்.

கலைவாணர் சகல கலாவாணர்; அவர் பாடுவார்; ஆடுவார்; நடிப்பார்; நடிக்க வைப்பார்; எழுதுவார்; எழுத வைப்பார்; இயக்குவார்; மேடையில் உரை ஆற்றுவார்; மக்களை மகிழ வைப் பார். வில்லிசைப் பாடலால் காந்தியின் கதையைப் பரப்புவார்; ஹரிகதா காலட் சேபம் செய்யும் பாகவதர்களைப் போல, கதா காலட்சேபமும் செய்வார்.

வெறும் கதையை மக்கள் மன்றத் தில் சொல்லித் தனது காலட்சேபத்தை நடத்த அவர் விரும்பியதில்லை. கல்வி யினால் ஒருவன் உயர்வடைய முடியும் என்னும் கருத்தை உலகுக்கு உணர்த்தும் வகையில், கிந்தனார் கதா காலட்சேப நிகழ்ச்சியை, பட்டி தொட்டிகளிலும் நகரங்களிலும் வெற்றிகரமாக நடத்தி, எல்லாத் தரப்பு மக்களின் இதயங்களை யும் கவர்ந்தார்.

நகைச்சுவை மன்னர் என்றும் கலைவாணர் என்றும் சிறப்புப் பெயர் களை மக்கள் மன்றத்திடமிருந்து பெற்ற என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள், 1934-இல் முதன் முதலாக சதிலீலாவதி என்னும் படத்தில் நடித்தார். அவரது கடைசிப் படமான அரசிளங்குமரி (1961-இல்) அவரது மறைவுக்குப் பின்னர் வெளிவந்தது. ஏறக்குறைய 150 படங்களுக்கு மேல் நடித்திருக்கும் அவர் கலை உலகின் முழுநிலவு என விளங் கினார்.

கலை உலகில் கருத்துக்களை வாரி வாரி வழங்கியது போல தனது வாழ்க் கையிலும் ஆயிரக்கணக்கானவர்களுக்குப் பணத்தை வாரி வாரி வழங்கியிருக்கிறார். (அந்த நிகழ்ச்சிகளையே ஒரு நூலாகப் படைக்கலாம்). கலியுலகக் கர்ணன் என்று பல பெருமக்களாலும் அவர் பாராட்டப் பெற்றிருக்கிறார்.

தியாகராய நகரில் வாணி மகாலுக்கு அருகில் 14.1.1969 அன்று கலைவாண ரின் உருவச் சிலையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத் தார்கள். உலகத்திலேயே ஒரு நடிகருக்கு எழுப்பப் பெற்ற முதல் சிலை இதுதான். நகைச்சுவைத் துறையில் தொடக்கத்தில் மேல்நாட்டு நடிகரான சார்லி சாப்ளி னைக் கலைவாணர் பின்பற்றியதுண்டு. அந்த சார்லி சாப்ளினுக்கு அவரது 92-வது பிறந்த நாளையொட்டி இலண்டன் லெஸ்டர் சதுக்கத்தில் 1981 ஏப்ரல் 16-ஆம் நாளில் சிலை எழுப்பப் பட்டது. ஆங்கிலேயர்கள் தமது நாட்டு நகைச்சுவை நடிகருக்குச் சிலை அமைப்ப தற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் தான் பெற்ற நகைச் சுவை திலகம், கலை உலகின் முழுநிலவு கலைவாணருக்குச் சிலை எழுப்பி நன்றி யைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.!



## அன்னை தெரசாவுக்கு விருது

உலகின் உயர்ந்த விருதான நோபல் விருதினைப் பெற்றவரான, அன்னை தெரசாவுக்கு 'இந்தியாவின் தவப்புதல்வி' என்ற விருதினை 8.11.'92 அன்று புதுடெல்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் வழங்கினார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பூட்டா சிங் தலைமையில் இயங்கும் பாரத் ஏக்தா அந்தோபன் என்ற அமைப்பின் சார்பில் இந்த விருது வழங்கப்பட்டது.

# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும்

# விஜய் உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! "முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்". ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.

**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

HTA 8249

கூட்டுறவு

## கனவு நனவாகிறது:



# ஏழை எளியோருக்கு எண்ணிலா வீடுகள்!

—அ. கனகசபாபதி
பதிவாளர் (வீட்டுவசதி),
சென்னை.

**த**மிழ்நாட்டில் செயல்படும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களது நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. பதிவாளரின் கீழ் ஒரு இணைப்பதிவாளர், துணைப் பதிவாளர்/நேர்முக அலுவலர் மற்றும் இதரப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் மாநிலத்தில் துணைப்பதிவாளர் அளவில் நிர்வகிக்கப்படும் ஒன்பது மண்டல அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலத் துணைப்பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் 1 முதல் 5 மாவட்டங்கள் வரை உள்ளன. மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் பிரதமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலமாக, கிராம வீட்டுவசதித் திட்டம் மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றன.

### கிராமப்புற வீட்டுவசதித் திட்டம்

கிராமப்புறங்களில் வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டிக் கொள்வதற்காக நிதி உதவியானது 1978-79-ஆம் ஆண்டில் இருந்து அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென சென்னை மாவட்டத்தைத் தவிர, மற்ற மாவட்டங்களில் ஒரு வட்டத்திற்கு ஒரு வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் என்ற அடிப்படையில் 165 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் இந்தக் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

ஒவ்வொரு வீடும் ரூ.10,000 மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. இதில் ரூ.7,000 இருபது ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் கடனாகவும், ரூ.1,500 அரசு மானியமாகவும் வழங்கப்படுகிறது. மீதி ரூ.1,500 பயனீட்டாளரால் ஈடு செய்யப்படுகிறது. கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 31.3.92 வரை 3,50,108 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காகத் தேவைப்படும் நிதி வசதியானது அரசிடமிருந்தும் மற்றும் அரசின் பொறுப்புறுதியின் பேரில் அட்கோ நிறுவனத்திடமிருந்தும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் பெற்று வருகிறது. இதனைத் தவிர வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலமாகக் கிராமப்புறங்களில் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டமும் 1989-90 முதல் செயல்படுத்தப்படுகிறது.

**கிராமப்புறங்களில் வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்க்கு, கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை 3,50,108 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.**

இத்திட்டத்தின் கீழ் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.22,000 கடனாகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.60,000 கடனாகவும் வழங்கி வருகிறது. 31.3.92 வரை குறைந்த வருவாய்ப் பிரிவினர்க்கான வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 5,424 வீடுகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்க்கான திட்டத்தின் கீழ் 5,214 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் குடியிருப்புக்களை மேம்பாடு அடையச் செய்யும் வகையில் இந்தியாவிலேயே முதன் முறையாகக் கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா) வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி கிரா மத்திலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களின் வீடுகளை மேம்படுத்தும் பணி யான கூரைக்குப் பதில் ஒடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்துதல், சுகாதார வசதி, தண்ணீர் வசதி ஆகியவை ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனீட்டாளர்களுக்கு 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் ரூ.2000 கடனாகவும் ரூ.500 தமிழக அரசு மானியமாகவும் அளிக்கின்றது. பயனீட்டாளர்கள் ரூ.500 முதலீடு செய்திடல் வேண்டும். இத்திட்டத் தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் 30,000 வீடுகள் மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம்**

நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நகர்ப் புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் உறுப்பினர் களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்குகின்றன. இதற்கான கடன் வசதி தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், தேசிய வீட்டுவசதி வங்கி மற்றும் அட்கோ நிறு வனத்திடமிருந்தும் கடனுதவி பெற்று வழங்கு கின்றன. நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங் கங்கள் நகர்ப்புறங்களில் வீடுகள் கட்ட தனி நபருக்கு உச்ச வரம்பு ரூ.1.50 இலட்சம் வரை கடன் வழங்குகின்றன.

தமிழ்நாடு முழுவதும் நகராட்சிகளில் நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன. இச்சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்துடன் இணைந்து கடன் பெற்று அங்கத் தினர்களுக்குக் கடன் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் இந்திய அளவில், எல்லா மாநில வீட்டுவசதி இணையங்களிலும் முன்னணியில் உள்ளது, என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் 31.3.92 வரை 1,12,518 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்**

1. கூட்டுறவு கட்டடச் சங்கங்கள் .. 342, 2. கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் .. 173, 3. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்.. 190, 4. கூட்டுறவு வீட்டமைப்புச் சங்கங்கள் .. 38, 5. கூட்டுறவு நகரியம் .. 1, 6. கூட்டுறவு வாடகைக் குடியிருப்புச் சங்கங்கள் .. 3, 7. தொழி லியல் தொழிலாளர் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் .. 29, 8. கூட்டுறவு வீட்டு மனைச் சங்கங்கள் .. 82, 9. அரிசன் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் .. 2, 10. வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் .. 165 ஆக மொத்தம் 1,025 சங்கங்கள் உள்ளன.

இதனால், பயன்பெறும் உறுப்பினர்கள் (31.3.92) .. 4,73,264

கட்டப்பட்ட வீடுகள் (31.3.92)

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்படி (1978-ஆம் ஆண்டிலிருந்து 31.3.92 வரை) .. 3,50,108

ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காகன திட்டப்படி (1989-90 முதல் 31.3.92 வரை) .. 5,424

இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டப்படி (1989-90 முதல் 31.3.92 வரை) .. 5,214

ஈ. நகரிய வீட்டுவசதித் திட்டப்படி (1959-லிருந்து 31.3.92 வரை) .. 1,12,518

வழங்கப்பட்ட கடன் அளவு

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டத்திற்கு .. ரூ.188.50 கோடி
ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு .. ரூ.14.21 கோடி
இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு .. ரூ.26.83 கோடி
ஈ. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டப்படி .. ரூ.479 கோடி

வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்.. 165

**1991-92-இல் கட்டப்பட்ட வீடுகள்**

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டம் .. 30,000
ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான திட்டம் .. 1,504
இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டம் .. 1,789
ஈ. நகரிய வீட்டுவசதித் திட்டம் .. 9,057

ஆக மொத்தம் 42,350 வீடுகள்.

வழங்கிய கடன் அளவு ரூ.113.20 கோடி

1992-93-இல் கட்டப்படவிருக்கும் வீடுகள்

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டம் .. 30,000
ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு .. 6,352
இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு .. 2,272
ஈ. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டப்படி .. 10,009
உ. சுப்ரா திட்டப்படி .. 30,000

ஆக மொத்தம் 78,624 வீடுகள், இவற்றுக்காக ஆகும் செலவு ரூ.136.04 கோடி.

**இலட்சியத்தில் பக்தி**

ஆசை இருந்தால் மட்டும் போதாது. இலட்சியத்தில் பக்தி வேண்டும். பெரும் முயற்சிகள் அனைத்துக்கும் சிரத்தை தேவை.

—பண்டித நேரு



# தமிழக அரசு வழங்கும் திரைப்பட விருதுகள்

**1990** மற்றும் 1991-ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகளுக்கான சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களைத் தெரிவு செய்வதற்காக, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பிரதாப் சிங் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. 1990-ஆம் ஆண்டிற்கு 29 திரைப்படங்களும், 1991-ஆம் ஆண்டிற்கு 58 திரைப்படங்களும் விருதிற்கான போட்டியில் கலந்து கொண்டன.

அனைத்துத் திரைப்படங்களையும் திரையிட்டுப் பார்த்த பின்னர், 28.10.1992 அன்று சென்னை, தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தேர்வுக் குழு, விருதுக்குரிய சிறந்த திரைப்படங்கள், திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோர்களைத் தெரிவு செய்து அதற்கான பட்டியலைத் தமிழக அரசிடம் வழங்கியது.

தமிழக அரசு, திரைப்பட விருதுக்கான தேர்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், திரைப்பட விருதுகளுக்காகக் கீழ்க்கண்ட திரைப் படங்களையும், நடிகர் நடிகைகளையும், தொழில் நுட்பக் கலைஞர்களையும் தேர்வு செய்துள்ளது.

## திரைப்பட விருதுகள்

சிறந்த திரைப்படங்கள்

1. முதல் பரிசு ... ரூ. 1.25 இலட்சம் ரொக்கம் மற்றும் கேடயம்.
2. இரண்டாம் பரிசு ... ரூ.75,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
3. மூன்றாம் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
4. சிறப்புப் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.

**சிறந்த நடிகர், சிறந்த நடிகை மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கான பரிசுகள்**

5 சவரன் மதிப்புள்ள பதக்கம் மற்றும் சான்றிதழ்கள்.

## 1990-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

**சிறந்த திரைப்படங்கள்**

1. முதல் பரிசு : புது வசந்தம்
2. இரண்டாம் பரிசு : கேளடி கண்மணி
3. மூன்றாம் பரிசு : கிழக்கு வாசல்
4. சிறப்புப் பரிசு : அஞ்சலி

**கலைஞர்களுக்கான பரிசுகள்**

1. சிறந்த நடிகர் : கார்த்திக் (கிழக்கு வாசல்)
2. சிறந்த நடிகை : ரேவதி (கிழக்கு வாசல்)
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) : சத்தியராஜ் (நடிகன்)
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) : கௌதமி (நம்ம ஊர் பூவாத்தா)
5. சிறந்த இயக்குநர் : விக்கிரமன் (புது வசந்தம்)
6. சிறந்த கதையாசிரியர் : விசு (வரவு நல்ல உறவு)
7. சிறந்த உரையாடல் ஆசிரியர் : வாசு (நடிகன்)
8. சிறந்த இசை அமைப்பாளர் : தேவா (வைகாசி பொறந்தாச்சு)
9. சிறந்த பாடலாசிரியர் : வாலி (கேளடி கண்மணி)

# கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் — பேரறிஞர் அண்ணா.

கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு சகாப்தம்!

அவரோடு அந்தச் 'சகாப்தம்' முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும்; மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது; புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் — மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர், உலகிலேயே, இவர் ஒருவர்தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!

கலைவாணர் வெறும் நடிகராக மட்டும் வாழவில்லை. உலகத்தைத் திருத்திய உத்தமராக - தாமும் நல்லவராக - மற்றவர்களையும் திருத்துபவராக - கருத்துக் கருவூலமாக - வாழ்ந்தார்; இன்று அவரை இழந்து, தமிழகம் தவிக்கிறது!

10. சிறந்த பின்னணிப் பாடகர் : எஸ்.பி. பாலசுப்பிரமணியம் (கேளடி கண்மணி)

11. சிறந்த பின்னணிப் பாடகி : சித்ரா (வைகாசி பொறந்தாச்சு)

12. சிறந்த ஒளிப்பதிவாளர் : அப்துல் ரகுமான் (கிழக்கு வாசல்)

13. சிறந்த ஒலிப்பதிவாளர் : விஸ்வநாத் (வைகாசி பொறந்தாச்சு)

14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) : கணேஷ் குமார் (ஒரு வீடு இரு வாசல்)

15. சிறந்த ஆர்ட் டைரக்டர் : சலம் (உலகம் பிறந்தது எனக்காக மற்றும் நடிகன்)

16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : விக்ரம் தர்மா (நடிகன்)

17. சிறந்த நடன ஆசிரியர் : சுந்தரம் (அஞ்சலி)

**1991-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்**

**சிறந்த திரைப்படங்கள்**

1. முதல் பரிசு : சின்னத்தம்பி
2. இரண்டாம் பரிசு : என் ராசாவின் மனசிலே
3. மூன்றாம் பரிசு : குணா
4. சிறப்புப் பரிசு : சேரன் பாண்டியன்

**கலைஞர்களுக்கான பரிசுகள்**

1. சிறந்த நடிகர் : பிரபு (சின்னத்தம்பி)
2. சிறந்த நடிகை : குஷ்பு (சின்னத்தம்பி)
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) : ராஜ் கிரண் (என் ராசாவின் மனசிலே)
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) : பானுப்பிரியா (அழகன்)
5. சிறந்த இயக்குநர் : பி. வாசு (சின்னத்தம்பி)
6. சிறந்த கதையாசிரியர் : ஈரோடு சவுந்தர் (சேரன் பாண்டியன்)
7. சிறந்த உரையாடல் ஆசிரியர் : ஈரோடு சௌந்தர் (சேரன் பாண்டியன்)
8. சிறந்த இசை அமைப்பாளர் : மரகதமணி (அழகன்)
9. சிறந்த பாடலாசிரியர் : பிறை சூடன் (என் ராசாவின் மனசிலே)
10. சிறந்த பின்னணிப் பாடகர் : மனோ (பல படங்கள்)
11. சிறந்த பின்னணிப் பாடகி : சுவர்ணலதா (சின்னத்தம்பி)
12. சிறந்த ஒளிப்பதிவாளர் : ரகுநாத் ரெட்டி (அழகன்)
13. சிறந்த ஒலிப்பதிவாளர் : சம்பத் (சேரன் பாண்டியன்)
14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) : ஜெயச்சந்திரன் (மாநகரக் காவல்)
15. சிறந்த ஆர்ட் டைரக்டர் : தோட்டாத் தரணி (தளபதி)
16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : சூப்பர் சுப்பராயன் (மாநகரக் காவல்)
17. சிறந்த நடன ஆசிரியர் : டி.கே.எஸ். பாபு (சின்னத்தம்பி)



# கூட்டுறவு முறையில் நாய் வளர்க்கத் திட்டம்

பன்னெடுங்காலமாக நாய் மனிதனுக்குத் தோழனாக வும், காலவலானகவும் விளங்கி வருகிறது.

''வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா''

— என்று பாரதியார் நாயினை மனிதனின் தோழனாய்ப் பாடியுள்ளார்.

அன்புக்கு இலக்கணமாய்த் திகழும் நாய் மனிதனுக்குப் பல்வேறு விதங்களில் பயன்படுகிறது.

அன்பு விலங்காய் -
பணக்காரன் முதல் பாமரன் வரை
வீட்டையும், உடைமையும் காக்கும் காவல் நாயாய் -
வேட்டை நாயாய் -
துப்பறியும் நாயாய் -
குருடர்களுக்கு வழி காட்டும் நாயாய் -
ஆட்டு மந்தைகளைக் காக்கும் நாயாய் -
நீரில் மூழ்குபவரைத் தூக்கி உயிர்காக்கும் நாயாய் -
வெடி மருந்துகளையும், போதை மருந்துகளையும்
மோப்பத்தால் உணர்ந்து தூதுவனாய் -
செய்தி கொண்டு செல்லும் தூதுவனாய் -
நிலத்தடியிலும், பனிப்புதைப்பிலும் இருக்கும்
பொருட்களைக் கண்டுபிடிக்கும் நாயாய் -
பல்வேறு வீர விளையாட்டுகளைக் காட்டும்
வித்தை நாயாய் இது விளங்குகிறது.

### இராஜபாளையம் நாய்

பல்வேறு நாய் இனங்கள் உலகில் இருக்கின்றன. அல்சேசன், டாபர்மேன், பொம்மரேனியன், டேசன்ட், லேபிரடார், டால்மேசியன், கிரேட்டன் போன்று உலகில் சுமார் 400 இனங்கள் பல்வேறு தேவைகளுக்காகப் பழக்கப்பட்டு உள்ளன. இவற்றுள் தமிழகத்தின் இராஜ பாளையம், கோம்மை, சிப்பிப்பாறை, கன்னி என்ற நான்கு இனங்கள் பழங்காலந்தொட்டு இருந்து வரு கின்றன. இவற்றினில் இராஜபாளையம் இனம் காமராசர் மாவட்டத்திலுள்ள இராஜபாளையத்தில் தோன்றிய ஒன்றாகும்.

புண்டைக் காலத்தில் பெரும் நிலச்சுவான்தார்கள் இந்நாயினை மிக்க அக்கறை கொண்டு வளர்த்து வந்துள்ளனர். தற்போது இராஜபாளையம் இனம் வளர்ப்பு அதனைப் பேணிக் காக்கும் ஏழைத் தொழி லாளிக்குத் தொழிலாக உள்ளது. இந்நாய் காட்டு வேட்டைக்கும், வீட்டுக் காவலுக்கும் மிகவும் பயனுள்ள தாகும். நம்பகமான நண்பனாகவும் செயல்படுகின்றது.

இனப் பண்புகள் மாறாது வளர்க்கப்பட்டு வந்த இராஜபாளையம், காலப்போக்கில் சிதைவுறத் தலைப் பட்டது. தனி ஆர்வம் கொண்டு இந்நாயினைப் பராமரிக் காத காரணத்தினால் தூய்மையான இந்த இனத்தில் கலப்பினங்கள் தோன்றிலாயின. இவ்வாறே சிறப்புக் கவனம் செலுத்தப்படாவிட்டால், சிறிது காலத்தில் இராஜபாளையம் என்ற நாய் இனமே அழிந்து விட வும் ஏதுவாகலாம். ஆகவே, இந்த இனத்தின் தூய பண்புகள் அழிந்திடாது காத்திடுதல் அவசியமாகும்.

### நாய் பராமரிப்பு முறை

குட்டிகளுக்கு பிறந்தவுடன் கண் இமை மூடியிருக்கும். சுமார் 10 நாட்கள் சென்ற பின் கண் திறந்து பார்வை தெரியும். பெண் நாய் 2 முதல் 12 குட்டிகள் வரை ஈனும். குட்டிகளுக்குத் தாய்ப்பால் அவசியம் தர வேண் டும். வளர்ப்பதற்குக் குட்டிகளை, தாயிடமிருந்து சுமார் 6 வாரங்கள் கழித்து எடுப்பதே நலமாகும். குட்டிப்பருவத் தில் பால் அடிக்கடி அருந்துவதற்குத் தர வேண்டும். பின்பு உணவு தர வேண்டும். குடல் புழு நீக்குவதற்கு மருந்து மாதத்திற்கு ஒரு முறை தர வேண்டும். குட்டிப் பருவத்தில் 2-வது மாதத்தில் டிஸ்டெம்பர் (Distemper) என்ற தொற்று நோய்த் தடுப்பூசி போட வேண்டும். பின்பு 6-வது மாதத்திற்குள் வெறி நோய்த் தடுப்பூசியும், மற்றும் நிகழ்வில் உள்ள நோய்களுக்குத் தடுப்பு நட வடிக்கைகளும் எடுக்க வேண்டும்.

நாய் உணவில் இறைச்சி கலப்பது நலமாகும். காய்கறிகள், அதிகமாய்க் கலந்து தரலாம். உப்பு, காரம், இனிப்பு உணவில் அதிகம் சேர்க்காது இருக்க வேண்டும். நல்ல உடற்பயிற்சியும் தேவையான கட்டளைப் பயிற்சியும் (Training) நாய்க்குத் தரப்பட வேண்டும். பேன், உண்ணி, நாய் ஈ ஆகியவற்றை பற்றாது நாயினை நன்கு பராமரித்து வளர்க்க வேண்டும். இவ்வாறு வளர்த்தால் தான் நாய் மனிதனுக்குப் பயனுள்ள நண்பனாய் அமையும்.



# வலிப்பு நோயாளிக்கு இலவச மாத்திரைகள் - அரசு அறிவிப்பு:

வலிப்பு விழிப்புணர்ச்சி வாரம் 11.11.92 அன்று சென்னை கலை வாணர் அரங்கில் நடந்தது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் விழா வினைத் தொடங்கி வைத்தார். வலிப்பு நோய் குணமடைந்த 4 பேர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அவர் வழங் கினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்கள் பேசுகையில், "வலிப்பு நோய்களுக்குத் தேவையான நான்கு நாட்கள் தொடர்ந்து உண்ண வேண்டிய மாத்திரைகளை, சமூக நலத்துறையே இலவசமாக வழங்கும் எனவும், திருமண விவகாரத்துச் சட்டத்தில் வலிப்பு நோயும் விவாகரத்து செய்ய ஒரு காரணமாக அமைகிறது. ஆகையால் இச்சட்டத் திலிருந்து வலிப்பு நோயை நீக்கி விதி விலக்களிக்க 2 அல்லது 3 மாதத்திற்குள் மைய அரசுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளப்படும் என்றும், பள்ளிகளில் வலிப்பு நோய் வந்த மாணவ-மாணவியர்களை உதாசினப் படுத்தினால், அப்பள்ளி நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், அரசு என்னதான் திட்டங்களை நன்முறையில் செயல்படுத்த முயன்றாலும், மக்களிடம் ஒத்துழைப்பு சரியாகக் கிடைக்காவிடில் அரசின் திட்டங்கள் எந்த வகையிலும் வெற்றிடைய வாய்ப்பில்லை. திருமண விவாகரத்துச் சட்டங்களிலிருந்து வலிப்பு நோயை நீக்குவதற்கு முயற்சி மேற் கொள்ளப்படும் என்றும் கூறினார்.

சமூக நலத்துறைச் செயலர் ஆர்.கிருபாகரன், சமூக நலத்துறை இயக்குநர் திரு கண். தீனதயாளன் ஊனமுற்றோர் நல்வாழ்வு இயக்குநர் திரு. ஏ. பிச்சை, இந்தியன் வங்கித் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. எம். கோபாலகிருஷ்ணன், பேரா சிரியர் சி.வி. வேல் முருகேந்திரன், நரம்பியல் மருத்துவர் திரு. ஜகந்நாதன் ஆகியோர் பேசினர்.

தொகுப்பு: சண்முகசுந்தரம்.

---

குட்டி சுமார் 9 மாதத்தில் பெரிய நாயாகிறது. ஆண் நாயினை சுமார் 12 மாதத்திற்குப் பின் இனவிருத்திக் குப் பயன்படுத்தலாம். பெண் நாய் சுமார் 8 மாதத்தில் முதலில் பருவத்திற்கு வரும். ஆனால், அதற்கு அடுத்து வரும் பருவத்தில்தான் அதனை இனவிருத்தி செய்யலாம். ஆண்டிற்கு இருமுறை இனவிருத்திக்கான பருவத்திற்கு வரும். ஜூன், ஜூலை மற்றும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் இப்பருவம் வரும் நாயின் சினைக்காலம் 62 நாட்கள்.சுமார்2 முதல் 12 குட்டிகள் வரை ஈனும்.

நாய் வளர்ப்பு ஒரு இலாபகரமான தொழிலாகும். இராஜபாளைய இனக்குட்டிகளின் தேவை அதிகமான தாகவும், கிடைப்பதற்கு அரியதாகவும் உள்ளது. அதிக விலை கொடுத்து வாங்கி வளர்க்க ஆர்வமுள்ளவர்கள் பலர் உள்ளனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பால் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன. இப்பொதுவான திட்டங்களிலிருந்து சிறிது மாறுபட்டு வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் ஒரு பகுதியினரை வேளாண்மையை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்தி வருவதிலிருந்து மாற்றி, தங்க ளுடைய வறுமையை நீக்குவதற்குத் தங்களின் தொழிலாக இராஜபாளையம் போன்ற நாய்களை வளர்த்து, அதனின்று கிடைக்கும் குட்டிகளை விற்பனை செய்து தமது வருவாயினைப் பெருக்கிக் கொள்ள வாய்ப் பளிக்கும் பொருட்டு, காமராசர் மாவட்டத்தில் நாய் வளர்ப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்பின் மூலம் இத்திட்டத்தினைச் செயல் படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திட்டப் பொருளாதார அறிக்கை**

இத்திட்டத்தின் மூலம் ஒருவருக்கு 2 பெண் குட்டிகள் வழங்கலாம்.

**முதலீடு:** 2 பெண் குட்டிகளின் விலை தடுப்பு மருந்து விலை உட்பட .. ரூ.1,500

**செலவு:** 2 குட்டிகளுக்கும் உணவு மற்றும் பராமரிப்புச் செலவு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு .. ரூ.1,000

**வரவு:** ஓராண்டிற்கு 5 குட்டிகள் வீதம் 10 குட்டிகள் ஒரு குட்டியின் விற்பனை விலை ரூ.600 வீதம் .. ரூ.6,000.

**கடனும் தவணையும்**

மொத்த வங்கிக் கடன் .. ரூ.500

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மானியம் .. ரூ.833

கடன் திரும்பச் செலுத்தும் தவணைத் தொடக்கம் .. ஓராண்டிற்குப் பின்

தவணைக் காலம் .. 3 ஆண்டுகள்.

மானியம் நீக்கி வங்கிக்குத் திரும்பச் செலுத்தப்பட வேண்டிய தொகை .. ரூ.1,667

ஓராண்டிற்குப் பின் வசூலிக்கப்படும் முதல் தவணை ரூ.555

ஓராண்டுக்கான வட்டி 10 சதவிகிதம் .. ரூ.166

வங்கிக்கு ஓராண்டிற்குப் பின் செலுத்தும் தொகை .. ரூ.721

ஓராண்டிற்குப் பின் கிடைக்கும் இலாபம்

மொத்த வருமானம் நாய்க் குட்டிகள் விற்பனை மூலம் ரூ.6,000

வங்கிக்குத் திரும்பச் செலுத்த வேண்டிய தொகை .. ரூ.721

நிகர இலாபம் .. ரூ.5,279.

## புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா

## பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்:

# பொதுமக்கள் பயன்பெறுவது எப்படி?

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இன்னும் செம்மையான முறையில் செயல்படுத்தவும், ஆண் குழந்தைகளே வேண்டுமென்ற மனப்பான்மையை மக்களிடையேயிருந்து போக்கவும், பெண்சிசுக் கொலையைத் தடுக்கவும், பெண் குழந்தைகளின் நலனை மேம்படுத்தவும் அரசு தீவிரமாக ஆலோசனை செய்தது.

அதன் அடிப்படையில் சிறு குடும்ப நெறியை மக்களிடையே பரப்பவும், ஏழைக் குடும்பங்களிலுள்ள பெண் குழந்தைகளுக்கு உதவும் பொருட்டும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் ஒரு புது திட்டத்தை அறிவித்தார். "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்" எனப் பெயரிடப்பட்ட இந்தப் புதிய திட்டத்தை, 1992 அக்டோபர் திங்கள் முதல் அமல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் குடும்பத்தில், ஒரு பெண் குழந்தையின் பெயரில் தமிழக அரசின் சார்பில் ரூ.2,000 முதலீடு செய்யப்படும். இப்பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளிலிருந்து, பள்ளி இறுதிப் படிப்பு வரை முதலீடு செய்யப்படும் தொகையிலிருந்து ஒரு சிறு தொகை, கால இடைவெளியுடன் அப்பெண்ணுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும்.




### இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவது எப்படி?

★ இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் குடும்பத்தின் தலைவனோ அல்லது தலைவியோ கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்திருக்க வேண்டும். கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் நேரத்தில், அந்நபருக்கு வயது 35-க்குள் இருக்க வேண்டும்.

★ இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் பெற்றோர்களுக்கு, ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும். ஆண் குழந்தைகள் இருக்கக் கூடாது.

★ இத்திட்டத்தில் சேர விரும்பும் பெண் குழந்தை, அந்த வீட்டின் ஒரே பெண் குழந்தையாகவோ அல்லது இரண்டாவது பெண் குழந்தையாகவோ இருக்கலாம்.

★ இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் பெண் குழந்தைகள், இந்தத் திட்டத்தில் சேரும் நேரத்தில், வயது மூன்றுக்கும் குறைவாக இருக்க வேண்டும்.

★ இந்தத் திட்டத்தில் சேர விரும்பும் பெண் குழந்தையின் குடும்பம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பமாக இருத்தல் அவசியம். இந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.6,400/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

### எப்படி விண்ணப்பம் தருவது?

இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் பெண் குழந்தையின் பெற்றோர் தகுந்த சான்றுகளுடன், அதற்கான விண்ணப்பத்தில், மாவட்டச் சமூக நலத் துறை அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மாவட்ட சமூக நலத்துறை அலுவலரின் பரிந்துரையின் பேரில், அப்பெண் குழந்தையின் பெயரில் அரசு ரூ.2 ஆயிரம் முதலீடு செய்யும். இந்தத் தொகைக்கு ஓராண்டுக்கு 12 சதம் வட்டி கிடைக்கும்.

இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயனடையும் பெண் குழந்தைகள் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாதவாறு பள்ளி இறுதிப் படிப்புவரை படித்தால்தான், இந்தத் திட்டத்தின் முழுப் பயனையும் பெறமுடியும்





# மரபு சாரா எரிசக்தி உற்பத்தியில் தமிழகத்துக்குத் தேசிய விருது!

நவீன எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்த ஆண்டு தோறும் தேசிய அளவில் விருதுகள் வழங்கப்படுகின்றன. காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் பிரிவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

மரபுசாரா எரிசக்தித் துறை பொறுப்பு வகிக்கும் மாநில அமைச்சர்களின் மாநாடு, புது டெல்லியில் 5.11.92 அன்று நடைபெற்றது. மாநாட்டை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில், மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் பிரிவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான விருதினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் மாண்புமிகு தமிழக பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர் களிடம் புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டின்போது வழங்கினார்.

காற்றாலை மூலம் எரிசக்தித் துறையை வளப்படுத்திய மைக்காக தமிழக அரசைப் பாராட்டிப் பேசிய மாண்புமிகு பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை வலுப்படுத்த அமைச் சர்கள், மாநில முதல்வர்கள், அரசு அலுவலர்கள் ஆகிய அனைவரும் உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே மின் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொண்டு வந்தாலும் இன்றும் ஏறத்தாழ ஒரு இலட்சம் கிராமங்கள் நமது நாட்டில் மின் வசதியின்றி உள்ளன.

சுற்றுச் சூழலுக்கு ஓரளவாவது கேடு ஏற்படாத வகையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதும், விநி யோகிப்பதும் இயலாத காரியம் என நிரூபிக்கப்பட்டிருப் பதாலும், மின்திட்டங்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியைப் பெறுவது கடினமாகிவிட்ட படியாலும், மரபுசாரா எரிசக்தித் திட்டங்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. என மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறினார்.

மரபுசாரா எரிசக்தித் திட்டம்பற்றி ஆராயப்பட்ட போது, அது மிகவும் செலவு குறைந்த ஒன்றாகக் கண்டறியப்பட்டிருப்பதால், வர்த்தக ரீதியில் லாபாகர மானதாக இத்திட்டத்தைக்கொண்டுவர முயல வேண்டும் எனவும் மாண்புமிகு பிர்தமர் அவர்கள் இம்மாநாட்டின் போது கேட்டுக் கொண்டார்.

இத்தகைய கூட்டம் இவ்வாண்டில் இரண்டாவது முறையாக நடத்தப்படுவது மரபுசாரா எரிசக்தித் திட்டம் மக்கள் மனதில் இடம் பிடிக்கத் தொடங்கி விட்டது என்பதையே காட்டுவதாகவும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறினார்.

---

என்ற விதத்தில் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் இந்தத் திட்டத்தில் சேரப் பதிவு செய்யும் பெண் குழந்தைகள், அரசு இறுதியில் வழங்கும் ஒட்டு மொத்தத் தொகை யான ரூ.10 ஆயிரத்தைப் பெற குறைந்தது 10-வது தேர்ச்சி பெற்ற வராகவும், தமது 20-ஆம் வயது முடியும் வரை திருமணம் செய்யா மலும் இருத்தல் அவசியம்.

இந்தத் திட்டத்தில் சேர்ந்த பெண் குழந்தை 20 வயதுக்குள் இறந்து விட்டால், அந்தக் குடும்பத் தின் இன்னொரு பெண் குழந்தை 20 வயது பூர்த்தி செய்யாமல் இருந் தால், இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, முழுப் பயனை யும் பெறலாம்.

இந்தப் புதிய, பெண் குழந் தைகள் பாதுகாப்புத் திட்டம்; நடப்பு நிதியாண்டு முதலே செயல் படுத்தப்படும். 1992 அக்டோபர் திங்கள் முதல் நாளுக்குப் பிறகு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெற்றோர்கள் இத்திட்டத்தில் சேரத் தகுதியுடைய வராவார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

